மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1 - 10 - 53 | இதழ் 11



"சிறைச்சாலை ஒரு விடுதலை இயக்கத்தின் பயிற்சி முகாம்"

தனி அணு 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணு 5

Best copy available.

சிறைச்சாலையா ? பயிற்சிசாலையா

விடுதலை வீரர்கள் சிறைச்சாலையில் தள்ளப்படுவது புதிதல்ல. வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து, கொடுமையை எதிர்த்தோர், அடக்குமுறைக்கு அடங்க மறுத்தோர், அடிமை விலங்குகளை அகற்ற முயன்றோர், விடுதலை காணத் துடித்தோர், இவர்கள் இரும்பு ஆரங்களால்தான் அலங்கரிக்கப்பட்டனர், சிறைச்சாலைகளில்தான் வாழ நேர்ந்தது.

விடுதலைப் பாதையின் வழியே, அடக்குமுறை, தண்டனை, சிறைச்சாலை, துப்பாக்கி, தூக்குமேடை இவைகள் வழிமறித்திருக்கின்றன. இவைகளைத் தாண்டித்தான் விடுதலை வீரர்கள் தமது இதய லட்சியத்தை, இன்ப புரியை அடைய முடிகிறது. இந்தத் தடைகளைத்தும் விடுதலை இயக்கங்களைத் தடுக்க முயன்றிருக்கின்றன. ஆனால் வெற்றி பெற்றதில்லை.

ஒவ்வொரு தடையும், விடுதலைக்கு அழைத்துச்செல்லும் படிக்கட்டுகளாக அமைந்தன. ஒவ்வொரு கட்டமும், விடுதலை யியக்கத்தினரை பயிற்றுவித்து மேலே அனுப்பும் பயிற்சிசாலையாக ஆகிவிட்டன. அந்தவகையில் சிறைச்சாலை ஒரு பயிற்சிசாலையாக விளங்குகிறது.

விடுதலை வீரனை விலங்குகளால் பிணித்தாலும், சிறையிலே தள்ளினாலும், அவனது கொள்கைகளை பிணிக்கமுடிவதில்லை, சிந்தனையைச் சிறையிட முடிவதில்லை.

விலங்குகளைத் தாண்டி, கொள்கையின் நீண்ட கரங்கள் மக்களைத் தட்டியெழுப்பிய வண்ணம் இருக்கின்றன. சிறைச் சுவர்களைத் தாண்டி, சிந்தனையலைகள் பரவுகின்றன.

"கருங்கற் சுவரும் காவற்கூடமாகுமோ
இரும்புக் கம்பியும் பெருஞ்சிறை யாமோ!
தூய்மை மனத்தன் விடுதலை வீரன்
சிறைச்சாலை தானும் அறச்சாலை ஆகுமே."

என ஒரு ஆங்கிலக்கவி பாடினார்.

"கொடுமைகளாலும் கஷ்ட நஷ்டங்களாலும் தாக்கப்படும் இந்த நீண்ட பாதையின் வழியே செல்லாமல், வேறு வழிகளால் விடுதலை உரிமையை அடைந்த நாடு எதுவுமிருப்பதாக எனக்கு ஞாபகமில்லை" என அண்ணல் காந்தி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

"நேர்மையற்ற முறையில் சிறை செய்கிற அரசாங்கத்தில், நேர்மையற்ற மனிதர்களின் உண்மையான இருப்பிடம் சிறைச்சாலைதான்" என அமெரிக்க விடுதலைப் போராட்டத்தைப் பற்றி தோரியோ என்பவர் கூறினார்.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" என பாடினார் புரட்சிக் கவி பாரதிதாசன்.

"சிறைச்சாலை—நமது கழகத்தின் ஒரு கிளையாக அது ஆகிவிட்டது." எனப் பேசினார் அறிஞர் அண்ணா, கடற்கரை கூட்டத்தில்.

"சிறைச்சாலை—அது ஒரு பயிற்சி சாலையாக விளங்குகிறது" எனக் கூறுகிறார்கள் பாஜி பிரதர்ஸ், தமது ஓவியத்தின் மூலம்.

விடுதலை வீரர்களுக்குச் சிறைச்சாலை, ஒரு அறச்சாலையாக, நேர்மையற்ற ஆட்சியில் நேர்மையானவர்கள் இருக்கவேண்டிய இடமாக, விடுதலைப்பாதையில் தவிர்க்க முடியாத கட்டமாக, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக; உரிமைக்காகப் போராடும் இயக்கத்தின் ஒரு கிளையாக, விடுதலைப்போருக்கு வீரர்களைத் தயாரிக்கும் பயிற்சி சாலையாக இருக்கிறது.

இருட்சிறையில் அறிவொளி வளர்கிறது; இரும்புச் சங்கிலியால் உரிமையுணர்வு உறுதியாகிறது. கருங்கல் சுவர்களிடை சிந்தனை வளர்கிறது, காவற்கூடம் விடுதலையியக்கத்தின் பயிற்சிக்கூடமாக ஆகிவிடுகிறது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1-10-53 வியாழக்கிழமை

நமது குடும்பம்

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்—ஏதோ நேற்று ஏற்பட்டதுபோலத் தோன்றுகிறது! கழகம்—நமது குடும்பம் புதிய இடத்துக்குக் குடியேறியது. கழகத்திலிருக்கும் நாம், ஒரு குடும்பத்திலிருப்பவர்களைப்போலப் பழகிவிட்டோம். பாசமும் நேசமும் நம்மை ஒன்றாகப் பிணைத்ததுபோல, வேறெதுவும் செய்ததில்லை. சொந்த வாழ்வில் நமக்கு எவ்வளவு துயர்களும், துன்பங்களும் வந்தபோதிலும், பொதுவாழ்வில்—நமது கழகத்தில் கிடைத்த தோழமையெனும் மருந்து அவற்றையெல்லாம் ஆற்றி வந்தது.

மாநாடோ, பொதுக்குழுவோ நடக்கப்போகிறதென்றால், ஏதோ நம் குடும்பத்தில் நடக்கவிருக்கும் விழாவாக, மகிழ்ச்சிதரும் நன்னாளாக எண்ணியே ஒவ்வொருவரும் பூரிப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றினார்கள். அவர்களுடைய அன்பு கலந்த அழைப்பே, வருவோருக்கு ஒளிவீசிடும் வரவேற்பு வளைவாயிற்று, மகிழ்ச்சிதரும் முகமே எழுதவொண்ணாத வரவேற்பு இதழாயிற்று, ஆர்வமொழியே தெவிட்டாத அமுதாயிற்று. ஒவ்வொரு மாநாடும், குடும்பத்தினர் கூடிப்பிரியும் இடமாக இருந்தது. மாநாட்டுக்குச் சென்றால் காஞ்சியண்ணனைச் சந்திக்கலாம். ஆரூர் தம்பி அங்கே வந்திருப்பான், கோவைக் குமரனும், தூத்துக்குடி குரிசிலும், சேலம் செம்மலும், திருச்சிச் செல்வமும், மதுரை நம்பியும், சென்னை இளவலும் இவ்வளவு பேர்களும் வந்திருப்பார்கள்; ஒருங்கே கண்டு உறவாடலாம், இனி நடப்பதற்கான திட்டங்கள் வகுக்கலாம் என்று எண்ணியபடி வருவோர் பலர். மாநாடுகளில் நிறைந்திருக்கும் இந்த மாபெரும் குடும்பத்தைக் காணும்பொழுது இதயத்தில் மகிழ்ச்சி கூத்தாடும், நினைக்கும்பொழுது நெஞ்சில் உரனும், புதிய வலிவும் உண்டாகும்.

இவ்வளவுக்கும் நமது மாநாடுகளில் வருவோருக்கு வேண்டிய வசதிகள் சிலசமயங்களில் செய்யக்கூடுவதில்லை. அதற்கு நமக்கு இருக்கும் வளமும் குறைவானது, வருவோர் தொகையும் அளவுகடந்தது. எதிர்பாராமல் மழை பெய்துவிட்டால், கூடியிருக்கும் இடம் சேறும், சகதியுமாகிவிடும். அதில் அமர்ந்துதான் மேற்கொண்டு நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டும். கட்டுச்சோறுடன் வந்து, இடைவேளையில் மற்ற தோழர்களுடன் தாம் கொண்டுவந்திருக்கும் உணவைப் பகிர்ந்து கொள்ளும் குடும்பங்கள் எத்தனையெத்தனை! அந்தக் காட்சி செட்டிநாட்டு வேந்தர் தரும் சிங்கார விருந்தைவிட, ஒரு ஆலயரசர் தரும் தேநீர்க் கச்சேரியைவிட இன்பமாகவன்றோ இருந்தது! மாநாடு நடக்கும் பொழுது, ஒருவருக்கொருவர் காட்டிக்கொள்ளும் பரிவும், பண்பாடும், உதவியென்றதும் ஓடோடியும் வந்து பணிபுரியும் தோழர்கள், அழுகின்ற குழந்தையை முத்தமிட்டுத் தூங்க வைக்க முயலும் தாய்மார் இவர்கள் எவ்வளவு பெருந்தகையினராக நம் மாநாடுகளில் குழுமியிருக்கக் காணுகிறோம். அதிலும், இரவில் மாநாடு நிகழ்ச்சி முடிந்ததும், அப்படியே மாநாட்டுப் பந்தலிலோ, வெளியில் வயற்புறத்திலோ, கையே தலையணையாகக்கொண்டு, நிலவு வெளியில் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் உறங்கிடும் காட்சி! இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? கொள்கையிலே உள்ள பற்று, அதைவிட நம் குடும்பத்திலே நிலவும் பாசம், இவைதாம் காரணம்.

அந்தப் பாசம்தான், ஏசலும், பூசலும், ஏளனமும் கேலியும் நம்மைத் தாக்கிய நேரங்களில் நம்மை நிலைகலங்கச் செய்யாதிருந்தது. ஏசுவோர் சிலர், நம்மை நேசிப்போர் பலர் இருக்கின்றனர் என்ற எண்ணம் மற்ற இழி

மொழிகளையும், பழிச்சொற்களையும் தாங்கிக் கொள்ளச் செய்தது.

அந்தக் குடும்பப் பாசம்தான் வேதனைப்பட்ட நிலையிலும், கலங்கிநின்ற நேரத்திலும், நமது வேதனையைத் தணித்து கலக்கத்தை நீக்கி, காரியமாற்றும் திறமையைத் தந்தது.

அத்தகைய குடும்பப் பாசமும், நேசமும் நம்மிடையே நிலவியதால்தான், மிகக் குறுகிய காலஅளவில், கட்டுப்பாடும், கண்ணியமும் மிக்க, மிகப்பெரும் கட்சி அமைப்பை நாம் உண்டாக்கிவிட முடிந்தது. மற்றக் கட்சிகளில் இருப்பதுபோல் தலைமைபீடமென்ற ஒரு விசாரணைக்கூடமோ, பழிவாங்கும் பலிபீடமோ இங்கு இல்லாதுபோயிற்று. மற்றவர்கள் துடிதுடிப்புடனும் ஆவேசத்துடனும் தரும் கட்டளைகளுக்கு, புன்முறுவலுடன் பதில் தந்து, சாந்தப்படுத்தவேண்டிய நிலையில் நமது செயலாளர் இருந்தாரேயொழிய, "இதோ புதிய கட்டளை; ஏற்றுக்கொண்டு செய், இல்லையானால் வெளியேறு!" என்று எப்பொழுதும் சொல்லியதில்லை.

நமது குடும்பத்தில் குமுறல் கிடையாது, விம்முதல் கிடையாது. தம்பி பென்சில் கேட்டு அண்ணன் உடனே வாங்கித் தராவிட்டால், தம்பிக்குக் கோபம் வருவதைப்போல, "எங்க ஊருக்குக் கூப்பிட்டேன் வரவில்லை" எனக் கோபப்படும் தம்பிமார்களுண்டு. அந்தக் கோபம் பேச்சிலே படபடப்பைக் காட்டும், இதயத்தில் குமுறலை உண்டாக்குவதில்லை. அன்பிலே எழுந்த மறுப்பு, ஆர்வத்திலே உண்டான கோபம் இது பாசத்தை நம்மிடம் அதிகமாக வளர்த்தது.

தம்பிமார்களாகிய நாம் பல தடவைகளில் அறிந்தோ, அறியாமலோ, அண்ணன்மார்களுக்குக் கோபத்தைத் தந்திருப்போம், அவர்களும் பலதடவைகள் வருத்தப்பட்டும், சில சமயங்களில் கோபப்பட்டும் இருப்பார்கள். ஆனால் இவை நமது பாசத்தை முறித்ததில்லை, நேசத்தை அழித்ததில்லை. காரணம் நமது உள்ளத்தில் கள்ளமிருந்ததில்லை, இதயத்தை மறந்து நாம் எதுவும் செய்ததில்லை.

புதிய இடத்திற்கு நாம் குடியேறிய பொழுது, நமக்கென்று கூற நம்மிடம் அதிகம் இல்லை; உழைப்பும், வியர்வையும்தான் நமக்கிருந்தவை. நாம் எதையும் நம்முடன் எடுத்து வரவில்லை, கண்ணியத்தையும் தன்மதிப்பையுந் தவிர. பிரிந்துவந்த நாம் சிதறிவிடவில்லை, நமது குடும்பம் மறைந்துவிடவில்லை. வாழ்வதற்குப் புதுவீடு உண்டாக்குவதில் கவனஞ் செலுத்தினோம். கால்கோள் காணப்பட்டது, அடிப்படை தோண்டப்பட்டது. கல்லும் முள்ளும் நிறைந்த கொல்லையை, பண்படுத்த வேண்டிய பணியும் நம்முன் இருந்தது. நமது வேலை பயன்தாராததென கூறினோரும் உண்டு, எள்ளிநகையாடி ஏளனம் செய்தோரும் உண்டு.

நாம் புதுவீடு கட்டும்பொழுது, மற்றவர்கள் நம்மீது வீசிய ஏளனத்தையும், கேலியையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. "ஏளனத்துக்கு ஏளனம், கேலிக்கு கேலி" என்று பேசிக்கொண்டிருந்தால், நமது வேலை தடைப்பட்டிருக்கும், வளர்ச்சி குன்றியிருக்கும்.

வரண்டுகிடந்த இடத்தில், நமது குடும்பம் வாழ்வதற்கு ஒரு வீட்டை அமைத்தோம், பக்கத்தில் வாசமலர்த்தோட்டத்தை உண்டாக்கினோம்.

"போகிற நேரம் தவறானது, புகுந்த இடம் பொல்லாதது" என்று நம்மை பயமுறுத்தினர்களே, அது பொய்யாக்கப்பட்டது.

போன இடம் பொன்னான இடமாக, வேலை துவங்கிய நாள் ஒரு நன்னாளாக ஆயிற்று.

நமது குடும்பம் தழைத்தது, குடும்பப்பெயர் விளங்கியது.

வீழ்ந்ததெனக் கருதப்பட்ட குடும்பம் எழுந்ததுகண்டு ஊரில் ஆச்சரியப்பட்டனர், வெற்று இடத்தில் புது வீடு—நமது முயற்சி, வெற்றிக்கொடியுடன் நிற்பதுகண்டு ஆச்சரியப்பட்டனர்—பலர் ஆச்சரியப்பட்டனர், சிலர் பொறாமைப்பட்டனர்.

விலைக்குவந்தால் வீட்டை வாங்க சிலர் காத்திருந்தனர்; "கடன் கொடுத்துப் பார்ப்போம், பின் குடும்பம் முழுகியபின் ஏலத்தில் வீட்டை எடுத்துவிடலாம்" எனச் சிலர் கருதினர். அரசியல் செல்வந்தர்களிடம் நாம் நமது வீட்டை விற்கவேண்டிய நிலை என்றுமே

பிறக்காது, கடன் வாங்கிக் காலந்தள்ளவேண்டிய கட்டத்திலும் நாம் இல்லை.

தோட்டத்தில் மல்லிகை மணம் வீசிய நேரத்தில், பறித்துக்கொள்ள நினைத்துக் கொண்டோர் சிலர். அத்தகைய சூது நடைபெறுவண்ணம் தடுத்த வேலியும், காவலும் கண்டு ஆயாசமடைந்தனர், "ஆகாது இந்த காவல்" என்று முறையிட்டனர். நமது வாசற்படியில்வந்து, முறைமையுடன் உள்ளே வருவோருக்கு, மலர்ச்செண்டு தருவோம். ஆனால் வேலி தாண்டி மலரை எடுத்துச்செல்லலாம் என்று யாராவது நினைத்தால் நிச்சயமாக அதில் முள்பட்டு கீறலும், வேதனையும் உண்டாகுமே தவிர, மலர் கிடைக்காது. வியர்வையை வேரிலேவிட்டு, பெருமூச்சைக் காற்றுக்கி செடியை வளர்த்தவர்கள், அவர்களுக்கு மலரின் மணமும் தெரியும், அதன் பயனும் தெரியும்.

நமது குடும்பம் புது வீட்டிலே—தூற்றலுக்கும், கொடுமைச்சாரலுக்கும் இடந்தராத, ஒளியைத் தடுக்கும் ஜன்னல்களில்லாத, தென்றலைத் தடுக்கும் வ[illegible]களில்லாத, உள்ளே நுழையும்பொழுது மண்டையில் அடித்து வரவேற்கும் நிலைப்படி இல்லாத—கட்டிமுடித்த அண்ணன்களில் ஒருவர் உருவத்தில் சற்றுக் குறைந்த உயரமெனினும் உள்ளத்தால் உயர்ந்தவராதலால், உயர்ந்த உள்ளம் படைத்தோர் எவரையும் மட்டுப்படுத்தாத வாயல் நமது வீட்டுக்கு அமைந்தது—இரகசிய அறைகளில்லாத, மந்திரமாடமில்லாத, பூஜைக்கூடமில்லாத, அந்தப் புதிய வீட்டில் நாம் இருக்கிறோம்.

அங்கு ஒளி வீசிச் செல்கிறது, தென்றல் தவழ்ந்து வருகிறது.

அது நாட்டு அறிவின் அகமாக, நமது அன்பின் இடமாக விளங்குகிறது.

ஊராரின் கேலி, உற்றாரின் ஏளனம், பகைமையின் எதிர்ப்பு, பங்காளியின் காய்ச்சல் எதுவும் நம்மைப் பிரிக்கவில்லை. நமது பாசம் வளர்ந்தது, நமது குடும்பம் வளர்ந்தது.

ஊராள்வோரின் அடக்குமுறையும், மாற்றுக் கட்சியினரின் கொடுமையும் நம்மீது பாய்ச்சப்பட்டபொழுது, குடும்பப்பாசம் நம்மையெல்லாம் ஒன்றாகக் கட்டிக் காத்தது.

கொள்கை நம்மை ஒன்றுகூடச் செய்தது, பாசமும் நேசமும் நம்மை ஒருவரோடொருவர் கைகோர்த்து, ஒன்றாக நிற்கச் சேர்த்தன.

தியாகராயநகரில் கண்ணீர்ப்புகையும், தடியடியும் தரப்பட்டபொழுதும், கோர்த்து நின்ற கரங்கள் பிரிய மறுத்தன, அடிபட்டுக் கீழே விழுந்தபொழுதும், இரத்தம் வழிந்தபொழுதும், அந்தச் சங்கிலித்தொடர் அறுபடவில்லை. குடும்பப் பாசம் விலகவில்லை.

துப்பாக்கி இரத்தவெறியுடன் முழங்கிய தூத்துக்குடியில், மண்டைகள் சிதற குண்டுகள் பறந்துவந்த கல்லக்குடியில், பிணங்கள் விழுந்தன. எலும்புகள் நொறுங்கின, அங்கங்கள் பிய்த்தெரியப்பட்டன. கொடுமைக் கோரத்தாண்டவமாடியது, எனினும் நமது குடும்பம் சிதையவில்லை. முன்னைவிட பாசத்தால் அதிகமாக நெருங்கியது, பலமடைந்தது.

இரும்புத் தொப்பியும், பூண்போட்ட தடியும், துப்பாக்கி முனையும், தோட்டாவின் வரவும், எதுவும் நம்மை அழிக்காது; நமது குடும்பத்தைச் சிதைக்காது, குடும்பப் பாசத்தை அறுத்துவிடாது.

உறுதியான கொள்கை, பண்புமிக்க பாசம் இவற்றால் கட்டப்பட்டு சேர்ந்துவாழ்கிறோம். ஒன்றுபட்டு நிற்கிறோம் நாம். ஒன்றுபட்ட குடும்பம் அந்த ஒற்றுமைமுன் ஊராள்வோரின் கூர்வாள் மழுங்குகிறது.

விலகி நிற்கும் விரல்கள், தண்ணீரைக்கூடச் சேந்தி எடுக்க முடியாது. ஆனால் ஒன்றுபட்டு, மடக்கப்பட்ட விரல்கள், கல்லைத் தாக்குமளவுக்கு வலிவு பெறுகின்றன. அத்தகைய வலிவு, ஒன்றுபட்ட தன்மை, குடும்பப் பாசத்தினால் வருகிறது.

நமது குடும்பம்—அது புதுமைகண்ட நன்னாள். அதை முழுப்பொலிவுடன் கொண்டாடும் வாய்ப்பு நமக்கு இல்லாமற் போயிற்று. குடும்பத்தைச்

சேர்ந்தவர்கள் சிதறிக்கிடக்கின்றனர், சிறைச்சாலைகளில், சட்டமன்றங்களில். ஆறுமாதம், மூன்றுமாதம், ஐந்துவாரம், இருபது நாள் எனத் தண்டனைகளைப்பெற்றுக் காவற்கூடங்களில் இருக்கின்றனர். குண்டடிபட்டும், தடியடி தாக்கியும், படுகாயங்களேற்றும், நமது குடும்பத்தினரில் பலர் மருத்துவமனையில் கிடக்கின்றனர். அதில் ஆறுபேர் இறந்தும்விட்டனர். இந்த நினைவுகள், கழகம் தொடங்கிய நன்னாளில் நாம் கொள்ளவேண்டிய குதூகலத்தை மட்டுப்படுத்துகிறது. நமது குடும்பத்தின் வரலாற்றில் மிக முக்கியமான நாளைக் கொண்டாடவேண்டிய நேரத்தில், இன்று எவ்வளவுபேர் உள்ளே சென்றனர், நாளை எவ்வளவுபேர் வெளிவருகின்றனர் என்று கணக்கெடுத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. வாழ்த்துப்பாக்களைப் பார்க்கவேண்டிய நேரத்தில், தண்டனைப் பட்டியலைப் படிக்கவேண்டியிருக்கிறது. நாட்டில் பட்டி, தொட்டிகளெங்கும் சுற்றி, நற்பணிபுரியும் நமது குலமாமணிகளிடம் வரவேற்பு இதழ்கள் தரப்படுவதுபோக, அரசாங்கம் தம் சிறைக்கூடத்துக்கு வரவேற்கும் குற்றப்பத்திரிகைகள் அவர்களிடம் தரப்படுகின்றன.

“குற்றவாளிக”ளெனத் தண்டிக்கப்பட்டனர், அதனால் நமது குடும்பத்துக்குத் தலையிறக்கம் உண்டாகவில்லை.

நோயினால் செத்த மகனைக்கண்டு புலம்பிடும் தாய், நாட்டைக்காக்கும் வீரப்போரில் மகன் மாண்டான் என்று கேள்விப்பட்டால், களிப்படைவாள் என்று படிக்கிறோம். அதுபோல் உரிமைப்போராட்டத்தில், தாயகத்தின் விடுதலைப் போரில் கலந்துகொள்ள எண்ணற்ற வீரர்களை, இளங்காளைகளை, குடும்பத்துச் செல்வங்களை, குலவிளக்குகளை அனுப்பியிருக்கிறது இந்தக் குடும்பம். களத்தில் அவர்கள் காட்டிய வீரங்கண்டு மகிழ்வடைகிறது, குடும்பத்தின் நற்பெயர் காப்பாற்றப்பட்டது கேட்டு கவலை விடுகிறது.

ஆயினும் அந்த நாளில்—புது இடம் கண்ட நன்னாளில், போக்கிலே முன்னேற்றமும், வாழ்விலே நம்பிக்கையும் கொண்ட நன்னாளின் நாலாம் ஆண்டு முடிவில், ஐந்தாம் ஆண்டு முதல் நாளன்று, அந்த வீரர்களின் நினைவு குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கு வாராமற்போகவில்லை அவர்கள்—கண்ணனூர் சிறையிலிருந்து வேலூர் சிறைவரை, சென்னைக் காவற்கூடத்திலிருந்து தூத்துக்குடிக் காவற்கூடம்வரை, தமிழகத்தின் எல்லாச் சிறைகளிலும் நிறைந்திருக்கின்றனர், அன்பால், பாசத்தால் நிறைந்த அவர்கள்.

சிறைக்கூடங்களில் பிரிந்து கிடக்கும் பல்லாயிரக்கணக்கானவர்கள், சாக்காட்டில் நம்மை விட்டுப் பிரிந்த ஆறுபேர்களை, கையிழந்து, கண்ணிழந்து, காலிழந்து, மண்டையில் கட்டுடன், மார்பில் காயத்துடன் நிற்கும் நூற்றுக்கணக்கானவர்கள்—அந்த பொன்னாளில் நம் மனக்கண்முன் வந்தனர். அந்த ஆசை முகங்களை மறக்கவில்லை, அவர்கள் கூறிய நேச மொழிகளை நினைக்கத் தவறவில்லை.

“எங்கள் குடும்பம் பெரிது” என்று கூறிப் பெருமைப்படும்பொழுது, அதனால் நமக்குள்ள பெரும் பொறுப்புகளை நாம் மறந்துவிடக்கூடாது—மறந்துவிடவில்லை. அதிலும், நம் குடும்பத்தினரில் பலர் காவலில் இருக்கும் பொழுது, மற்றவர்களுக்கு—வீட்டில் இருப்பவர்களுக்கு, களம்சென்று திரும்பியவர்களுக்குப் பொறுப்பு இரட்டிப்பாகிறது. அவர்கள் விட்டுச்சென்ற வேலைகளை, தொடங்கிவைத்த பணிகளை, மேற்கொண்டு செய்து முடிக்கவேண்டும். வீட்டின் தூய்மையைப் பாதுகாக்கவேண்டும், தூசிவிழவோ, மாசுபடியவோ நாம் அனுமதிக்கக் கூடாது.

தோட்டத்திற் செடிகள் அலர்ந்துபோகாமல் தண்ணீர் விட்டுவரவேண்டும். மலர்ந்த பூக்கள் பறிபோகாமல் பாதுகாக்கவேண்டும்.

ஐந்தாம் ஆண்டு தொடக்கத்திலிருந்து நாம்—கடுமையான எதிர்ப்பு நம்மீது வீசப்படும் நேரத்தில், நாட்டின் உரிமைகளைக் காக்க, நமது குடும்பத்தின் நற்பெயரைக் காக்க, நாம் போராடி நிற்போம், கண்ணியத்தை இழவாமல், பாசத்தையும் நேசத்தையும் மறவாமல்.

★★

தமிழ்ப்பெரியார்
திரு. வி. க.

[பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ.]

தமிழ் நாடு, தமிழ்ப்பெரியார், செந்தமிழ் நாவலர், புதுமை எழுத்தாளர், சமயத் தொண்டர். புரட்சிப் பாவலர், தொழிலாளர் தலைவர், பெண்ணுரிமைக்காவலர், அரசியல் அறிஞர், சீர்திருத்தச் செம்மல், பொதுவுடைமைத் தந்தை, சுயமரியாதை அன்னை, தியாகர், சீலர், பொதுமையாளர், அன்பர், அறவோர், அந்தணாளர் என்ற இவ்வளவு பெருமைகட்கும் உரியவராக விளங்கிய ஒரு பெருந்தகையை, தூயவரை, தொண்டுள்ளம் பூண்ட உத்தமரை தமிழ்நாடு இன்று இழந்துவிட்டது. அந்தத் துயரத்தில், தமிழ்நாடு தன்னையே இழந்துள்ளது இன்று.

அவரது பொன்னுடல், இன்று புகழுடலாகி விட்டது. அவரது தொண்டு, பணி, அன்புள்ளம் யாவும், உலகமக்களுக்கு முழுதாக வழங்கப்பட்டுவிட்டன. ஆம், அத்தகு புண்ணியக் கிழவரை, பெரும்பணிபுரிந்த செம்மலை, தமிழ் வளர்த்த தலைவரை, மூச்சுள்ளவரை தொழிலாளர் தொண்டை மறவாத தோன்றலை, சென்னை—தனது மக்கள் வெள்ளமாகிய அன்புக்கடலில் மிதக்கச் செய்து, புகழ்க்கோட்டத்தில் கொண்டு நிறுத்தி, தூய்மைத் தீயில் ஒளி பெறச்செய்துவிட்டது சில நாட்கள் முன்.

தமிழ்த் தென்றல் ஓய்ந்தது. இனி அதன் ஊற்றுணர்ச்சி, உவகைச்சிலிர்ப்பாக புடியாக. நமது உணர்வும், உடலும், உள்ளமும் ஒருங்கே இறும்பூது எய்த முடியாது இனி. எனினும் அவரது கருத்தும் எழுத்தும் இயற்கைத் தென்றலைப்போல என்றும் மணம் வீசியபடியே இருக்கும்!

வடிவத்தை, வண்ணத்தை, மெய்ப்பாட்டை, செயலை இழந்தோம். அந்த மெய்விளைவித்த அறிவை, உணர்ச்சியை, பயனை இழக்கவில்லை.

திரு. வி. க. ஓரிடத்தினின்றும் மறைந்தார். ஆனால், பலவிடங்களினும்,—எங்கெங்கு காணினும் நினைப்பினும்—அங்கங்கெல்லாம்—நிலைபெறுகிறார். ஆம், அவருக்கு இறப்பில்லை!

திரு. வி. க. அவர்கள் 1883-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26-ஆம் நாள், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள துள்ளம் என்ற சிற்றூரில் பிறந்தார். அவரது தந்தையார் திரு. விருத்தாசல முதலியார், சென்னையினின்றும் அங்கு சென்று உறைந்து சிறு வாணிபம் நடத்திவந்தார். அவரது தாயார் சின்னம்மை என்ற பெயரினர். அவரது தந்தைக்கு இரண்டாவது மனைவியாராவார். குழந்தை கலியாணசுந்தரன், தமையன் உலகநாதன் தமக்கையர் முதலியோருடன், ஓலைவேய்ந்த சிறு குடிசையில் வளரலானார். அவரது குடும்பநிலை அவரை எளிமையில் பிறக்கச் செய்தது. அவரும் எளிமையிலேயே தவழ்ந்து வளரலாயினர். அது அவரது இயல்பும் ஆயிற்று. சிற்றூரின் சுற்றுப்புறம் இயற்கைச் சூழலில் அவரைத் திளைக்கச் செய்தது. அவ்வியற்கை அவரை வலிவோடும் வனப்போடும் திகழச் செய்தது. குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள் பல, அவரது உள்ளத்தில் ஈரத்தையும் வீரத்தையும் விளைவித்தன. அதுவே, அன்பு என்னும் விதை அவரது உள்ளத்தில் ஆழப்பதிந்து, தன்னலமறுப்பு என்னும் வேர்விட்டு பொதுத்தொண்டு என்னும் தழைத்துவளர்ந்த தருவாகி, நலங்கள் என்னும் தண்ணிழலும், அருஞ்சுவைக் கனியும் உலகிற்கு வழங்கக் காரணமாயிற்று.

பிள்ளைகளின் படிப்பைக்கருதிய பெற்றோர், சென்னை அடைந்தனர். திரு. வி. கவும், உலகநாதனும் சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் சேர்க்கப்பட்டனர். இடையில் முறிவுகள் நிகழினும், அவரது பள்ளிப் படிப்பு

…றுவுடையதாயிற்று. அங்கு ஆசிரியராக அமைந்த திரு. கதிரைவேற் பிள்ளை அவர்களிடம் பயின்று தமிழறிவு மிக்கவரானார். பின்னரும் தமிழ் அறிஞர் பலரிடம் பயின்று, தமது அறிவைப் பெருக்கிக்கொண்டார். பள்ளியில் படிக்கும்போதே பாதிரிமார்களிடம் கொண்ட தொடர்பால் கிருத்தவக் கொள்கைகளையும் உணர்ந்தார். ஆங்கிலப் பயிற்சியும் மேற்கொண்டார்.

குடும்பநிலை காரணமாக வேலைபார்த்து ஊதியம் தேடுவது அவசியமாயிற்று. ஸ்பென்சர் கம்பெனியில் இரண்டாண்டுகாலம் பணியாற்றினார். இந்திய விடுதலை இயக்கத்தின் உணர்ச்சி, அவரை ஆட்கொள்ளத் தவறவில்லை. உரிமை உணர்வுக்கு இடமளிக்காத அவ் வேலையை 1908-ல் உதறித்தள்ளி விலகினார்.

பின்னர் ஆயிரம்விளக்குப் பள்ளியிலும், வெஸ்லி கல்லூரியிலும், ஆசிரியராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும், பணியாற்றினார். அக்காலத்தில் குரான் கொள்கைகளையும் அறிய வாய்ப்பு ஏற்பட்டது. அவரது உள்ளம் சமய வெறியினின்றும் பொதுமை நெறியை நாடியது.

1912-ஆம் ஆண்டில், திருமதி. கமலாம்பிகை அம்மையாரை அவர் திருமணம் செய்து கொண்டார். இல்லறம் இனித்தது, சிறந்தது, வாழ்ந்தது. என்றாலும் நெடிது நிலைக்கவில்லை. பிறந்த குழந்தைகள் மறைந்தன. 1918-ல் துணைவியாரும் மறைந்தனர். காதலில் ஒருமை கண்ட அவரது உள்ளம், பின்னர் பலர் வற்புறுத்தியுங்கூட வேறு மணங்கொள்ள இசையவில்லை.

1917-ஆம் ஆண்டில் அரசியல் ஆர்வத்தீ—செழித்து வளர்ந்தது. பால கங்காதர திலகர், பிபின்சந்திரபாலர், லாலாலஜபதிராய் போன்ற தலைவர்களின் உரிமைக்குரல் அவரைப் பிணித்தது. உத்தமர் காந்தி, அன்னிபெசண்ட், வீரர் வ. உ. சிதம்பரம் ஆகியோருடன் தாமும் பணியாற்ற உள்ளங்கொண்டார். கல்லூரிப் பணியைவிட்டு நீங்கி, 'தேசபக்தன்' என்ற தேசிய தினசரிக்கு ஆசிரியராக அமர்ந்து இரண்டரை ஆண்டுகள் அதைச் சிறப்புடன் நடத்தினார். அதன் மூலம் உரிமைக்கிளர்ச்சிக்குப் பேராக்கம் தேடப்பட்டது.

உரிமைக்கிளர்ச்சி வெற்றிபெறத் தொழிலாளர் ஒத்துழைப்பும் தேவை எனக்கண்டார். அதற்குரிய விழிப்புணர்ச்சி அவர்களிடையே தோன்றவும், வளரவும், அக்காலை, தொழிலாளர் நலத்திற்கெனப் பாடுபட்ட தலைவர்களான, வாடியா, அருண்டேல், மிருநாளினி சட்டோபாத்தியாயா ஆகியோருடன் ஒன்றி நின்று சென்னை தொழிலாளர் சங்கத்தைத் துவக்கி வைத்தார்.

இந்தியாவில் முதன் முதல் தோன்றிய தொழிலாளர் சங்கமும் அதுவேயாகும். தோற்றுவித்ததோடு நில்லாது, பிள்ளையை வளர்க்கும் தந்தையென, முப்பதாண்டுகளாக அதனொடு தொடர்புகொண்டு, தொழிற்சங்கத் தந்தையெனப் போற்றும்படி அதனை வளர்த்த பெருமை—இந்தியாவிலேயே, திரு. வி. க. ஒருவருக்கே உரியதாகும். அத் தொழிலாளர்களின் ஆதரவுடனேயே 1920-ஆம் ஆண்டில், 'நவசக்தி' என்னும் கிழமை ஏட்டினைத் தொடங்கி பல ஆண்டுகள் (சுமார் 13-ஆண்டு காலம்) தொடர்ந்து நடத்திவந்தனர்.

'தேசபக்தன்' அவரது மகனானான், வீரம் பேசினான், வலம் வந்தான், களத்தில் நின்றான். 'நவசக்தி' அவரது மகளானாள், அழகு தமிழ் பயின்றாள், கலைநலம் பெற்றாள், உரிமை உணர்வுகொண்டாள், உலகத் தொண்டாற்றினாள், காதல் வளர்த்தாள், தாய்மை எய்தினாள், அருள் பொழிந்தாள், பெண்ணின் பெருமைக்கு 'இலக்கியமானாள்'. அவரது மக்களால், தாய்மொழிப்பற்று வளர்ந்து, தாய்நாட்டுப் பற்று ஓங்கியது. தமிழ் புத்துயிர் பெற்றதென்று கூறுவது சிறிதும் தவறாகாது.

அரசியல்மேடையில் ஆங்கிலமே பேசப்படும் மொழியாக இருந்த அக்காலத்தில் தமிழில் பேச உறுதிபூண்டார், பேசிக் காட்டினார், தமிழின் ஆற்றலையும் அழகையும் புலப்படுத்தினார். வேற்று மொழியில் பேசுவதையும் கண்டித்தார். சிறிது சிறிதாகத் தமிழ்நாட்டுத் தலைவர்களையெல்லாம் தமிழிலேயே பேசவைத்தார்.

தமிழ் ஏடுகளும், தாள்களும், பிறமொழி கலந்தே எழுதுவதும், மணிப்பிரவாள நடையையே போற்றுவதுமாக இருந்த அக்காலத்தில் வேண்டாத பிறமொழிகளை விலக்கிச், செந்தமிழ் நடையையே தாம் கைக்கொண்டார். எளிமையும், இயற்கையும், தெளிவும், அழகும்

தரும் நடையே—மொழிக்கேற்ற, அதன் வளர்ச்சிக்குரிய நடையாகும் என்பதைத் தம் நடையாலேயே நிலைநிறுத்தினார். மணிப்பிரவாளம் தேய்ந்து சமஸ்கிருத ஆதிக்கத் தமிழ் குறைந்து, அழகுதமிழ் விளக்கமுறலாயிற்று.

அவரிடம் பயிற்சிபெற்ற பலர் இன்று இதழ் ஆசிரியர்களாக உள்ளனர். அவரது நூல்கள் பலரை—பெரும் எழுத்தாளர்களாக வளர்த்துள்ளது தமிழ் அவரால் மறுமலர்ச்சி எய்தியுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அவரது தமிழ்த் தொண்டு தமிழ் நாடெங்கும் பரவ, வேர்விட்டு வளர—அவரது தன்னலமற்ற அரசியல் தொண்டு காரணமாயிற்று. பெசன்ட் அம்மையார் நடத்திய சுய ஆட்சி இயக்கத்தின்போதும், உத்தமர் காந்தியின் ஒத்துழையாமை கிளர்ச்சியின்போதும் அவராற்றிய அரசியல் தொண்டு, தமிழ்நாடு முழுவதும் அவரை அறிந்துகொள்ளக் காரணமாயின. அக்காலங்களில் தமிழ்நாட்டு காங்கிரஸ் இயக்கத்தின் முப்பெருந் தலைவர்களாக விளங்கிய, டாக்டர் நாயுடு, ஈ. வெ. இராமசாமி (பெரியார்) திரு. வி. க. ஆகியோருள், திரு. வி. க. அவர்களை ஆரம்பத்தில் தமது பேச்சாலும் எழுத்தாலும்—பெருமை பெற்று விளங்கியவராவார். அவர் ஒரு தலைவராக மட்டுமன்றிக் கலைஞராகவும் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றார்.

தமிழிலே உரைநடை நூல்கள் பெருகாத காலம் எழுதப்படுபனவும் புராணமாகப் பழங்கதையாக இருந்தகாலம். அக்காலத்தில் திரு. வி. க. அவர்களை அரசியல், சமூகவியல், பொருளியல், புதுமைக் கண்டுபிடிப்புக்கள், (விஞ்ஞானம்) முதலிய பல துறைகள் பற்றியும், முதன் முதலில் நற்றமிழிலே எழுதியவர்களவர். பல துறை மணமும் கொண்டதாயிற்று தமிழ்மொழி தமிழ்ச் செல்வம் வளரலாயிற்று.

திரு. வி. க. அவர்கள் எழுதியுள்ள நூல்கள் ()-க்கு மேற்பட்டனவாகும். எல்லா துறையிலும் அவரது நூல்களைக் காணலாம். உரைநடை நூலேயன்றிக் கவிதை நூல்களும் இயற்றியுள்ளார். அவை அவரது உள்ளத்தை உள்ளவாறே காணக் கருவியாவன. அவரிடத்தில் காணப்பட்ட எளிமையும், தூய்மையும், இனிமையும், பொதுமையும், அன்பும் அருளும் அவரது கவிதையின் வண்ணமாகும். பற்பல இடங்களில் புதுமை—புரட்சி செய்வதையும், உரிமை—ஆட்சிசெய்வதையும் அவரது கவிதைகளிலே காணலாம்.

காங்கிரசில் பணியாற்றிய காலத்தில்—சுய ஆட்சிக்கட்சியினரால் கையாளப்பட்ட உண்மைக்கு மாறான, வஞ்சகத்திட்டத்தைக் கண்ட திரு. வி. க. அவர்கள் 1927-ல் காங்கிரசை விட்டு விலகினார். என்றாலும் காந்தீயக் கொள்கையில் பற்றுக்கொண்டு இயக்கத்தின் போக்கில் ஒத்துழைத்தே வரலானார். தமது தன்னலமறுப்பாலும் — பதவிப்பற்றின்மையாலும் — விட்டுக்கொடுத்து இயக்கத்தை வளர்ச்செய்யும் ஆர்வமிக்க திரு. வி. க. அவர்கள், காங்கிரஸ் இயக்கம் சுயநலமிகள் சூழ்ச்சிக்காரர்கள், கையில் சிக்கிய போதெல்லாம்—அதனைத் தூய்மை செய்யப் பலப்பல முயற்சிகள் செய்துள்ளார்.

சென்னை தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் ஒப்பற்ற தலைவராகநின்று, அவர் நடத்திய போராட்டங்கள் பலவாகும். தொழிலாளரின் இன்ப துன்பங்கள் அவரது இன்பமும் துன்பமுமாயின. 1937-ல் ஏற்பட்ட ஓர் உரிமைப் போராட்டத்திலும் பின்னர் நடந்த போராட்டங்களிலும், ஆட்சிபீடத்தில் அமர்ந்த காங்கிரஸ்—முதலாளி காங்கிரஸாக அமைந்து—தொழிற் காங்கிரஸை அழிக்க முனைவதைக் கண்டார். ஆளவந்தார் மாறினும் —ஆட்சிப்போக்கு மாறாததை எண்ணிக் கவன்றார். சுயராஜ்யம் கிடைத்த பின்னரோ-காங்கிரஸ் மேலும் ஏகாதிபத்திய நெறியில் நடந்தது—பாசீசப் போக்கில் ஈடுபட்டு-ஏழை மக்களை வதைசெய்வதைக்கண்டு வேதனை கொண்டார். அதன் பயனாக, தேசீயக் காங்கிரஸ்—அதன் ஆட்சி—ஒழியவேண்டும் என்று குமுறலானார். குடியாட்சி சிறக்க—இந்த தடியாட்சி தொலையட்டும், மக்கள் ஆட்சி பயன்தர —இந்த வெறியர் ஆட்சி நீங்கட்டும் என முழங்கினார் தொழிலாளர் தலைவர் திரு. வி. க. 'காங்கிரஸ்' பதவிப்பீடமும் அவரைத் தனது எதிரியாகவே கொள்ளலாயிற்று.

1919-ஆம் ஆண்டில்—சென்னையில் நடைபெற்ற மில் கதவடைப்புக் காரணமாக நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில்—முன்னின்றதற்காக, அவ்வமயம் சென்னை கவர்னராயிருந்த லார்டு வெல்லிங்டன், திரு.

வி. க. அவர்களை நாடுகடத்தத் தீர்மானித்தார். ஆனால்—நீதிக்கட்சித் தலைவர்கள் தியாகராயர், பானகல், டாக்டர் நடேசமுதலியார் ஆகியோரின் தலையீட்டால்—கவர்னர் தமது கருத்தை மாற்றிக்கொண்டார். பின்னர் அதே தொழிலாளர் தலைவர் திரு. வி. க. அவர்கள் 1947-ஆம் ஆண்டில் தொழிலாளர் உரிமைப்போரில் தலைமை தாங்கியதற்காக, அவரது வீட்டிலேயே ஒருமாதகாலம் சிறைப்படுத்தப்பட்டார், காங்கிரஸ் ஆட்சியில்.

நாடு கடத்தும் எண்ணத்தையே கைவிட்டது அன்றைய வெள்ளை ஆட்சி, நாட்டுக்குரியவர் கடமையைச் செய்ததால். இன்றைய காங்கிரஸ் ஆட்சி, நாட்டுக்குரியவரையே, வீட்டிற்குள் சிறைவைக்கத் துணிந்தது. ஆம் இது ஒன்றே போதும், காங்கிரசின் முதலாளித்துவ பாசிசப் போக்கின் கொடுமையே—திரு. வி. க. வை அதன் எதிரியாக்கியது என்பதை புலப்படுத்த.

இன்றைக்கு முப்பதாண்டுகட்குமுன் இந் நாட்டு மக்களின் மனப்பான்மை எந்த அளவு பழமை, வைதீகத்தன்மையுடையதாக இருந்திருக்கவேண்டும் என்பதை எண்ணிப் பார்ப்பவர்க்கே திரு வி. கவின் வீரமும், கொள்கை உரமும் விளங்குவதாகும். தீண்டாமைப்பேய் அதன் கொடிய கரங்களால் ஆதித்திராவிடரை நசுக்கிவந்தது: தனது அறிவுத்திறன் கொண்டு அப்பேயை ஒழிக்க ஒளிபரப்பினார். சாதிச் சழக்கு—சமுதாயத்தைச் சீரழித்தது. சாதியின் பொய்மையைப் புட்டுக் காட்டினார் பொது மக்களுக்கு.

சீர்திருந்திய சமயவாதிகளும், பகுத்தறிவு வாதிகளுமாகிய இருதிறத்தாரும், போற்றும்படியும், பொதுவாக தமிழர் அனைவருமே ஏற்கும்படியும் அவரது கருத்துக்கள் (கொள்கைகள்) பெரும்பாலும் சிறப்பு வாய்ந்துள்ளன. திரு. வி. க. அவர்கள் புதுமை போற்றும் கொள்கையினராகவும் இருந்தமையே சமயக்காவலராக ஒருபக்கம் தோன்றினும் நமது 'சுயமரியாதை' அன்னையாக மற்றொரு பக்கம் காட்சியளிக்கின்றார். சமயத்தைத் திருத்தப் புகுபவர் முதலில்—நாத்திகராகவே கூட எண்ணப்படுவதுண்டு. அதிலும் புதுமையை விழைபவர் நிலைபெற்ற சமய எதிரியாகக் கருதப்படுவர். திரு. வி. க. அவர்களின் பொதுமைக்கொள்கை—அவர் விரும்பிய சீர்திருத்தக் கொள்கைகள் பல—சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்குத் துணையாயின. எனவே திரு. வி. க. அவர்களே தம்மைச் சுயமரியாதை இயக்கத்தின் தாய் என்றும், பெரியாரைத் தந்தை என்றும் பூரிப்புடனும், பெருமையுடனும் கூறிக்கொண்டதை எவரே மறுக்கவல்லார்? அன்னையின் அன்பு நெஞ்சம், சேய்களின் வீரப்போக்கில் ஈடுபட்டு வாழ்த்தத் தவறவில்லை. திரு. வி. க. அவர்கள் சமுதாய அமைப்பையே, சீர்திருத்த இன்றியமையாததான பெண்ணுரிமைக்குப் பெரிதும் பாடுபட்டார். 'பெண்ணின் பெருமை' என்ற அவரது நூல் பெண்களுக்குச் சூட்டிய மகுடமாகும்.

தனியுடைமையே—தெய்வக்கட்டளை, விதியின் பயன் என்ற தத்துவம், நிலைத்து, பொதுவுடமை பேசுவதே—நாத்திகம் வளர்ப்பதாகும் என்ற வரட்டுக்கூச்சல் வளர்ந்திருந்த அக்காலத்தில் பொருள் பொதுமையே—சன்மார்க்கம்—அன்புநெறி என்பதை விளக்கலானார். மனிதப் பண்பு ஓங்க, அகம் அமைதி பெற, சமதர்மம் நிலவவேண்டும் என்று வாதாடினார். காரல் மார்க்ஸினுடைய தத்துவத்தை இந்நாட்டு மக்களின் மனப்போக்கிற்குப் பொருந்த, அதன் பயனை உயர்த்திக் காட்டினார். அதனை நிறைவேற்றவும், மறப்புரட்சியைக் கொள்ளாது அறப்புரட்சியே கொள்ளவேண்டும் எனவும் உணர்த்திவந்தார்.

ஆம், அத்தகு பெரியார்—உரிமைக்குப் பல துறையிலும் பாடுபட்ட பெரியார் 1939-ஆம் ஆண்டில் சென்னை மாணவர்க்குக் கட்டாய பாடமாக இந்தி நுழைக்கப்பட்டதைக் கண்டிக்கவும் முன்வந்தார். பின்னர் 1948-ஆம் ஆண்டில் ஈரோட்டில் அறிஞர் அண்ணா தலைமையில் கூடிய திராவிடர் கழக மாநாட்டில் கலந்துகொண்டு 'திராவிடநாடு' படத்தைத் திறந்து வைக்கும் திருப்பணியும் நிகழ்த்தினார். அவரது கருத்துரை விரிக்கின் பெருகும். "இன்னும் பத்து ஆண்டுகளில் திராவிடநாடு" என்று வாயார வாழ்த்தி உரைத்தார் அப்பெரியார். ஏழை மக்கள், தொழிலாளர், உழவர், பெண்டிர் ஆகியோர் உரிமைதனைக் காக்கவே பகுத்தறிவு ஓங்கவே, சமதர்மம், பொதுவுடமை எளிதில் பூக்கவே—திராவிடநாடு, தென்னாடு தனிநாடாகவேண்டும்—ஏதேச்சாதிகார காங்கிரஸ் ஆதிபத்தியத்தினின்றும் விடுதலை பெறவேண்டும் என்று முழக்கமிட்டார். ஆம்—

அவர் கருதிய விடுதலை (பூரண) முழுவிடுதலை; அவர் விரும்பிய உரிமை, வாழ்வுரிமை. எனவேதான்—தன்னலமற்ற தமிழ்ப் பெரியார்—திராவிடநாடு திராவிடருக்கே' என்பதையும் இசைக்க முன்வந்தார், அவரது கனவு—நினைவாகிக்கொண்டுள்ள இவ்வேளையில் அவர்—நமது நினைவானார். 'என்கடன் பணிசெய்து கிடப்பது' என்பதே அவரது தொண்டின் மூலமொழியாயிற்று. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்பதே அவரது தொண்டிற்குரியாரை விளக்குவதாயிற்று.

வள்ளுவர் வகுத்த அறத்தினை உணர்ந்து, புத்தர் காட்டிய பொன்னெறி போற்றி, காரல் மார்க்ஸ் காட்டிய பொருள் நெறி கற்று, வள்ளலார் உரைத்த உண்மை வழி நடந்து, காந்தியடிகளின் வாழ்க்கை நெறி நின்று, தமிழகத்தின் செங்கதிராய், வெண்ணிலவாய் விளக்கந்தந்தார் அவர்.

அந்தச் செங்கதிர், வெண்ணிலவு ஒரு வீட்டின் உட்புறத்தில் ஒடுங்கியிருந்த வேளையில் ஒரு நாள் காணச்சென்றேன். அவர் நெடுங்காலம் வாழ்ந்துவந்த வீட்டினின்றும்—வெளியேறி, அதன் எதிர்ப்புறத்தில், (அண்மையில் நமது தோழர் கண்ணதாசன் குடியிருந்த) உள்ள வீட்டினில், கீழே விரிக்கப்பட்ட பாயில் படுக்கையாக இருந்தார். பக்கத்திலே, ஒருவர் அவர்மீது கவனஞ் செலுத்தி இருந்தார். திரு. வி. க. அவர்களுக்குப் பேசவும் இயலாத நிலை. எனினும் வருகையைக் கூறியதும், உட்காரச் சொல்லி—தொட்டுப்பார்த்து மகிழ்ச்சியைப் புலப்படுத்தினார். அவரது உள்ளம் வாழ்த்தியதை உணர்ந்தேன். சிறிதுநேரம் தங்கி விடைபெற்றேன்.

அதன் முன்பு ஒரு முறை அவரைக் காணச் சென்றபோது—அவர் படுக்கையில் இருந்தபடியே நீண்டநேரம் மெதுவாகப் பேசினார்கள். அவரது எண்ணங்கள் பலவற்றின்மீது படிந்தன. சிறப்பாக டிராம்வே தொழிலாளருக்கு வேலையின்மையால் விளையும் துன்பம், ஆந்திரர் தம் மாகாண உணர்ச்சி, தென்னாட்டின் அரசியல்விழிப்பு ஆகியவற்றைப் பற்றி—சில கருத்துகளைத் தெரிவித்ததோடு, திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்குப்பெற்று வளர்வதைக் கேட்டுத் தாம் மகிழ்வதாகவும் தெரிவித்தார்கள்.

அரசியல் இயக்கம், நேர்மையும் உண்மையும் உள்ளவர்களால் நடத்தப்படவேண்டும் என்றும், தி. மு. க. அப்படிப்பட்ட பல நல்ல இளைஞர்களைக் கொண்டிருக்கிறதென்பது நம்பிக்கை அளிக்கிறதென்றும், சிறப்பாக—தோழர் அண்ணாதுரையின் அறிவாற்றல் இந்த நாட்டிற்கு நல்வாழ்வளிக்க முடியும் என தாம் எண்ணுவதாகவும் தெரிவித்தார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறியவுடன், நான். "தாங்கள் உள்ளபோதே—திராவிடநாடு உரிமை பெறவேண்டும் என்பதே எங்கள் ஆசை" என்றேன்.

"காலம் சுழல்கிறதே! இயற்கை என்னை எவ்வளவுநாள் விட்டுவைக்கும்! இளைஞர் நீங்கள்! உங்கள் முயற்சி வெல்லும்!" என்றார்கள்.

"மேலும்—ஆற்றலுள்ள இளைஞர்கள் பலர் உங்கள் கட்சியில் உள்ளனர். நீங்கள் ஏன் தேர்தலுக்கு நின்று—காங்கிரஸ் ஆட்சியை மாற்றக்கூடாது?" என்று கேட்டனர்.

சிறிது தயங்கிக் கூறினேன், "நாங்கள் இன்னும் வளரவேண்டும்" என்றேன்.

"வளர்வீர்கள்" என்றார் நமது தமிழ்ப்பெரியார் அவர்கள். அந்த வாழ்த்தை எண்ணியபடியே—அப் பெரியாருக்கு வணக்கம்கூறி விடை பெற்றோம். 'வளர்வீர்கள்' என்று வாழ்த்துரைத்த தியாகப் பெரியாரின் சொற்கள், இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டுள்ளன. ஆனால் அவ்வளர்ச்சியைக் காண அவர் இல்லை.

அவரது இலட்சியங்கள், அவரது புறவாழ்வை பொருள், பதவியினாலாகிய தனிவாழ்வை—உயர்த்தவில்லையெனினும், அவரது அகவாழ்வைப், பொதுவாழ்வை உயர்த்துவன. அந்த இலட்சியங்கள் வெற்றிபெறும் நாள் தொலைவிலில்லை! ஆம். அதோ தெரிகிறது, அந்த வெற்றி! நாம் எண்ண எண்ண அவ்வெற்றிகள் நெருங்கிவருகின்றன! பேரொளி பரவ்கிறது! வாழ்க திரு. வி. க! வளர்க அப் பேரொளி!

ஐக்கிய நாடுகள் சபை

(உலக விவகாரங்களைக் கவனித்து, நேசப்பான்மையில் முடிவுகளை எடுக்க ஐக்கியநாடுக ளின் சபை உண்டாக்கப்பட்டது அதன் பிரிவுகளும், வேலைகளும் கீழேதரப்படுகின்றன.)

தோற்றம்: நேசநாடுகள், அமெரிக்காவில் டம்பர்டன் ஓக்ஸ் என்ற இடத்தில் கூடிய பொழுது உலகநாடுகளனைத்தும் சேர்ந்து கூடவல்ல ஒரு சபை அமைப்பதுபற்றிப் பேசப்பட்டது. இது 1944, அக்டோபர் 7-ந் தேதியாகும்.

பின்பு 1945 ஏப்ரல் 25-ந் தேதியிலிருந்து ஜூன் 26-ந் தேதி வரை சான்பிரான்சிஸ்கோ நகரில் கூடிய கூட்டத்தில், ஐக்கியநாடுகள் சபை அமைப்பு தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டனர்.

ஆரம்பம்: ஐ. நா. சங்கம் 1945-ம் ஆண்டு அக்டோபர் 24-ந் தேதி ஆரம்பமாயிற்று.

கொள்கைகள்: ஐ. நா. சங்கம் கீழ்க்கண்ட கொள்கைகளுக்காக ஆரம்பித்தது.

(1) ஐ. நா. சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு நாட்டுக்கும் சங்கத்தில் ஒத்த உரிமைகள் உண்டு.

(2) சங்கத்தின் சட்டப்படி, அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் தமது கடமைகளை, முழுமனதுடன் நிறைவேற்றி, ஒத்துழைக்க வேண்டும்.

(3) உலக விவகாரங்களில் ஏற்படும் சச்சரவுகள் சமாதான முறையில் தீர்க்கப்பட வேண்டும்.

(4) ஐ. நா. சபையின் நோக்கங்களுக்குப் புறம்பான முறையில், பலாத்காரத்தின் மூலம் தமது விருப்பங்களை நிறைவேற்ற, அங்கம்வகிக்கும் எந்த நாடும் முயலக்கூடாது.

(5) ஐ. நா. சபை எடுக்கும் முடிவுகளை நிறைவேற்ற ஒவ்வொரு நாடும் ஒத்துழைக்க வேண்டும்; முடிவுகளை எந்த நாடாவது எதிர்த்தால், மற்ற நாடுகள் அந்த எதிர்ப்பு நாட்டுக்கு உதவியளிக்கக்கூடாது.

(6) உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் வகையில், அங்கம்வகிக்காத மற்ற இருந்துவரும்படி ஐ. நா. நடந்து

(7) அங்கம் வகிக்கும் நாடுகளின் உ நாட்டு விவகாரங்களில், ஐ. நா. சபை த யிடாது. ஆனால் இந்த விதி, ஆக்ரமிப்பு வே அமைதிமீறல், அமைதிக்குப் பங்கம் ஆகி நேரங்களில், ஐ. நா. எடுக்கும் நடவடிக்கை களைக் கட்டுப்படுத்தாது.

முக்கிய பிரிவுகள்: ஐ. நா. சபை ஆ பெரும் பிரிவுகளாக அமைந்து வேலை செய் வருகிறது.

அவையாவன: (1) பொதுச்சபை, (2) பா காப்புச் சபை, (3) பொருளாதார, சமூ சபை, (4) டிரஸ்டி சபை, (5) உலக நீதிமன்ற (6) தலைமை அலுவலகம் (செக்ரடேரியட்).

வழங்கும் மொழிகள்: ஐ. நா. சபையி ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷிய, சீன, ஸ்பெயி ஆகிய ஐந்து மொழிகளும் ஏற்றுக்கொள்ள பட்டிருக்கின்றன. ஆனால் நடைமுறை வழக்கி ஆங்கிலமும், பிரெஞ்சும் உபயோகப்படுத் படுகின்றன.

உலகச் சட்டமன்றத்தில் ஆங்கிலமு பிரெஞ்சும் மட்டுமே சட்ட நடவடிக்கைக எடுக்க உபயோகப்படுத்தப்படுகின்றன.

பொதுச்சபை: ஐ. நா. பொதுச்சபையி அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளும் பிரதிநி வம் பெறுகின்றன. ஐ. நாவில் இதுதான் மி முக்கிய பகுதியாகும். ஒவ்வொரு நாடும் ஐ பிரதிநிதிகள் கொண்ட கோஷ்டியை அனு லாம். ஆனால் ஒரே ஒரு ஓட்டுதான் போ முடியும். மிக முக்கியமான பிரச்சினைகளி வந்திருப்பவர்களில் மூன்றில் இரண்டு பகு யினர் ஆதரித்தால்தான் தீர்மானம் நிறை றும். முக்கியமில்லாத மற்ற பிரச்சினைகளி சாதாரணமாக அதிகப்படி எண்ணிக்

பார்த்து தீர்மானங்கள் நிறைவேறும். பொதுச் சபை ஆண்டில் ஒருமுறை கூடும்.

அமைதி காத்தல், போர்க் கருவிகள் பெருக்குவது, குறைப்பது பற்றி தீர்மானித்தல், உலகப் பிரச்சினைகளை ஆலோசித்தல், உலக நாடுகளிடை அமைதி கெடும் வகையில் ஏதாவது சூழ்நிலை உண்டானால், அப்போது தகுந்த முடிவுகளைக்காட்டி ஆலோசனை கூறுதல் இவையே பொதுச் சபையின் முக்கிய வேலைகளாகும்.

பொதுச்சபை நான்குவித உள்ளமைப்புகளின்படி தனது வேலைகளைக் கவனிக்கிறது. அவையாவன:—1. முக்கிய குழுக்கள் (Main Committees) 2. திட்டக் குழுக்கள் (Procedural Comimttees) 3. நிலையான குழுக்கள் (Standing Committees) 4. குறிப்பிட்ட குழுக்கள் (Ad hoc Committees).

முக்கிய குழுக்கள் பொதுச் சபைமுன் வைக்கப்பட வேண்டிய விஷயங்களைக் கவனித்து, நிகழ்ச்சி பட்டியல் தயாரிக்கின்றன.

திட்டக் குழுக்கள், பொதுச் சபையின் ஒழுங்கு, அமைப்பு இவைகளைக் கவனிக்கும்.

நிலையான குழுக்கள், சபையின் வரவு செலவுகளை கவனிக்கவும், நிர்வாகத்திற்கு உதவி செய்யவும், அங்கம் வகிக்கும் நாடுகள், தர வேண்டிய பங்கை நிர்ணயிக்கவும் இருக்கின்றன.

குறிப்பிட்ட குழுக்கள் ஏதாவது புதிய பிரச்சினையொன்றைப் பரிசீலனை செய்து, விவரங்களைத் தெரிவிக்க பொதுச் சபையாலோ, மற்ற குழுக்களாலோ நியமிக்கப்படுபவை. கொரியா பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை, பால்கன் பிரச்சினை போன்றவைகளைக் கவனிக்க, குறிப்பிட்ட குழுவே அமைக்கப்படும்.

(2) பாதுகாப்புச் சபை:—உலக நாடுகளிடை அமைதியும் பாதுகாப்பும் காப்பாற்றப் படுவதே இதன் குறிக்கோள். இந்தச் சபையில் 11 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவற்றில் சீனா, இங்கிலாந்து, பிரான்சு, ருஷியா, அமெரிக்கா ஐந்து நாடுகளும் எப்பொழுதும் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும். பொதுச் சபையிலிருந்து மற்ற ஏழு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற, நிலையாக இருக்கும் ஐந்து நாடுகள் உள்பட ஏழு நாடுகள் ஆதரிப்பதாக இருக்க வேண்டும். விவாதிக்கும் பிரச்சினையில் சம்மந்தப்பட்ட நாடு இருந்தால், அது தீர்மானத்தில் ஓட்டு அளிக்காது.

பாதுகாப்புச் சபை எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருப்பது; இரண்டு வாரத்தில் குறைந்தது ஒரு முறையாவது அது கூடவேண்டும்.

(3) பொருளாதார சமூக சபை:—

பொதுச் சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 18 அங்கத்தினர்களைக் கொண்ட சபை. இது உலக மக்களின் வாழ்க்கை நிலை, வசதிகள், பொருளாதார, சமூக, கலைகள், கல்வி, உடல்நிலை, போன்ற எல்லாவற்றையும் கூட்டுறவு முறையில் உயர்த்தப் பாடுபடுவதுடன் மனிதர்களின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. தனது வேலையைச் சீர்படச் செய்ய, பலவகை உட்கிளைகளை நியமித்திருக்கிறது.

(4) டிரஸ்டி சபை:—சர்வதேசச் சங்கத்தின் பாதுகாப்பில் இருந்த நாடுகளையும் இரண்டாவது உலகப் போருக்குப்பின் எதிரி நாடுகளிடமிருந்து பிரிந்து ஐ. நாவின் பாதுகாப்பை நாடிய இடங்களையும் பராமரிப்பதற்காக ஏற்பட்ட சபை. இப்பொழுது 12 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டவை மீதி 6, பராமரிப்புப் பிரதேசங்களை ஆளும் நாடுகள்.

(5) உலக நீதி மன்றம்:—உலக நாடுகளிடை ஏற்படும் சட்ட விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் சபை.

உலக நீதி மன்றத்துக்கு 15 நீதிபதிகளை பொதுச்சபை, பாதுகாப்புச் சபை இரண்டிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

நிர்வாகச் சபை:—பொது ஜன சபையார் தேர்ந்தெடுக்கப்படும், பொதுச் செயலாளர் ஒருவர்தான் ஐ. நா. காரியங்களனைத்தையும் கவனித்து வருகிறார். அவருக்கு உதவியாக இருக்கும் அலுவலகம் நிர்வாகச் சபையாகும்.

இவற்றையல்லாமல், உலகத் தொழிற்சங்கம், உலக உணவு — விவசாயசங்கம், ஐக்கிய நாட்டு கல்வி—விஞ்ஞான—கலாசார சங்கம், உலகப்பாங்கு, உலகச் சுகாதாரச் சங்கம் இப்படிப் பல சங்கங்கள் ஐக்கியநாடுகள் சபையின் கீழ் வேலைசெய்கின்றன.

இறவாத கொள்கை

**

இறப்பார்கள்! அவர்கொள்கை இறவாதப்பா!
எழுவார்கள் பலபேர்கள்! ஏற்காதப்பா!
அறப்போரின் முடிவையவர் அறிவாரப்பா!
ஆதாரம் பழஞ்சரிதை! காண்பாயப்பா!
பலப்போரில் திறங்காட்டி வெற்றிகொண்ட
பாண்டியரின் பரம்பரையில் வந்தாரப்பா!
என்தம்பி; என்தோழர்; உணர்வாயப்பா!
உணராயேல் காலமதை உணர்த்துமப்பா!

—கவிஞர் கண்ணதாசன்.

"கொள்ளைக்கூட்டம்"

ஆளுகின்றவர்களுக்கும், வல்லரசுகளுக்கும் இருக்கும் உண்மையான பலம், அவர்களுடைய் படை வரிசையிலோ, அதிகாரத்திலோ அல்ல; உண்மையானவர்கள், நேர்மையானவர்கள், ஒழுங்கானவர்கள் என்று அரசாங்கத்திலிருப்பவர்களைப்பற்றி மக்கள் கருதும்பொழுதுதான் உண்மையான பலம் கிடைக்கிறது. அந்த நிலையிலிருந்து மாறுபட்டால், அரசாங்கம் தன் மதிப்பை இழந்து, "கொள்ளைக்கூட்டத்தினரின் இருப்பிடமாக" ஆகிறது; அதன் ஆட்சிக் காலம் மிகக்குறுகியதாக இருக்கும்,

—எச். ஜி. வெல்ஸ்.

நம்மைக் காப்பாற்றியது

சொன்னதற்கெல்லாம் அடங்கிவிடாமல், உரிமைக்காக எதிர்த்து நின்றவர்கள்—அவர்களைத்தான் சிறந்த மனிதர்களென நான் நினைக்கிறேன். ஐந்து நூற்றாண்டுகளுக்குமுன் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் இருந்தவர்கள், மன்னர்கள் கூறுவதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டு நடந்திருந்தால், நாம் இன்று அடிமைகளாகவே இருந்திருப்போம். பித்தர்களும், மாயாவாதிகளும் கூறுவதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டிருந்தால், நாமனைவரும் இன்று முட்டாள்களாக இருந்திருப்போம். அவர்கள் அடங்க மறுத்தது, நம்மையெல்லாம் காப்பாற்றியது. அந்த விடுதலை உணர்வு மேன்மேலும் வளரவேண்டும்.

—இங்கர்சால்

ஆனந்தரங்கப் பிள்ளை

"காலமே பத்து மணிக்கு வங்காளத்திலே யிருந்து ஒரு கப்பல் ஓடிவந்து வச்சு பிடிச்சு 9 பீரங்கி போட்டான். அந்தக் கப்பலிலே வந்த சேதி யென்னென்றால் இந்தக் கப்பலுடனே கூட நாலு கப்பல் வங்காளத்திலே புறப்பட்டோம். ஒரு கப்பலிலே துரை வருகிறார். அந்த மூன்று கப்பலும் இன்றைக்கு காணுமோ நாளைக்கு காணுமோ என்று சொன்னான்.

இந்நாள் சாயங்காலம் நாலு மணிக்கு அந்த மூன்று கப்பலும் கண்டுது. அதிலே ஒரு கப்பலிலே முசே துப்பிளேக்ஸ் அவர்கள் இவ்விடத்துக்கு துரைத்தனத்துக்கு வந்தபடியினாலே அமரால் போட்டுக்கொண்டு வந்தார். வரச்சேதானே துறையிலே யிருந்த கப்பல்காரர் எல்லாம் அவரவர் பீரங்கி போட்டு மரியாதை பண்ணினார்கள். பிற்பாடு கோட்டைக்கு 21 பீரங்கி போட்டார் பதிலுக்கு கோட்டையிலே 21 பீரங்கி போட்டார்கள். கட்டுமரத்திலே கடுதாசி 5 மணிக்கு வந்தது. அந்தக் கடுதாசியிலே கடல் உரமாயிருக்கிறது காலமே இறங்குகிறோம் என்று சேதி வந்தது. இதுக்குள்ளே இவ்விடத்திலே முஸ்தீதுபண்ணி கடலோரத்திலே யிருந்து துரைவீடு மட்டுக்கும் இரண்டு புறமும் வாழைமரமும் தென்னமட்டையும் நட்டு முஸ்தித்தாயிருந்தார்கள். அந்தமட்டிலேயிருந்து காலமே ஆதிவாரநாள் காலமே ஆறுமணிக்கு அசுபதி நக்ஷத்திரம் மகர லக்னத்தில் முசே திப்பிளேயிக்சு அவர்களும் அவர்களுடைய பெண்சாதியும் மற்றுமுள்ள சனங்களுடனே இறங்கினார். துறையிலே இறங்கின உடனே கோட்டையிலே 21 பீரங்கி போட்டார்கள். கடலோரத்திலேதானே இவ்விடத்தில் இருக்கப்பட்ட துரையின் ஆலோசனைக்காரர் மற்றுமுண்டான பெரிய மனுஷர் அனைவரும் போய் கண்டார்கள். அங்கேயிருந்து கால்நடையாய் இருபுறமும் பாருவரத்தக்கதாக கோட்டைக்குள்ளே போய் கோவிலிலே பூசை கேட்ட உடனே பாருவச்சு மூனுதரம் பாரு நீத்தார்கள். பிற்பாடு எட்டு மணிக்கு கோட்டையிலிருந்து வீட்டுக்கு வந்தார். வரச்சேயும் நடந்துதானே வந்தார். கோட்டைவிட்டு புறப்பட்டு வரச்சே 21 பீரங்கியும் வீட்டுக்குள்ளே வந்து நுழைஞ்ச உடனே 21 பீரங்கியும் போட்டார்கள். அந்த மட்டிலே நட்டுமுட்டுக்காரர் நாடகசாலையாளுடனே சகல சம்பிரமத்துடனேயும் வந்து சுபதினத்தில் வீட்டிலே வந்து துரைத்தனத்துக்கு உட்கார்ந்தார்."

தமிழ்நாட்டுப் பேரறிஞர்களாலும், வரலாற்றுப் பேராசிரியர்களாலும் அரிய நூல் என்று போற்றப்படும் ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு என்ற ஏட்டிலே, ' 1742வரு ஜனவரிமீ 14ந் தேதிக்கு தைமீ 4ந் தேதி சனிவாரநாள்" என்ற தலைப்பின் கீழ் வரையப்பட்டுள்ள நாட்குறிப்பே, மேலே தீட்டிக் காட்டப்பட்டிருப்பதாகும்.

நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுப்பதும், அன்றாட நடவடிக்கைகளை வரைந்து வைப்பதும் இந்த நாட்டில் இன்னமும் நன்கு பழக்கப்படாத பண்புகளாகும். அந்தப் பண்புகளை மேலை நாட்டாரிடத்திலேதான் போற்றத்தக்க வகையில் மிகவாகக் காணலாம். கல்வி கேள்வியும், உலகியல் அறிவும் பெருகியுள்ள இந்த நாட்களிலேயே, அந்த பண்புகள், மிகச் சிலரிடத்துமட்டுமே அருமையானவையாகக் காணப்படுகின்றன என்றால், இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பண்புகளை இந்த நாட்டில் ஒருவரிடம் அவ்வளவு எளிதாக எப்படி எதிர்பார்க்க இயலும்? ஆனால் அத்தி பூத்தாற் போல் அந்தப் பெருமைக்குத் தம்மை முழுவதும் உரிமையாக்கிக்கொண்ட ஒருவர், அந்த நாட்களில், தமிழகத்தில் வாழ்ந்திருக்கிறார்;

அவர்தான் புதுச்சேரி திவான் ஆனந்தரங்கப் பிள்ளை அவர்கள் ஆவார்கள்.

ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பிலே யிருந்து, எடுத்துக்காட்டுக்காக, ஒரு நாளைய குறிப்பு, அவர் எழுதிய வண்ணம், கூட்டாமல், குறைக்காமல், சிதைக்காமல், திருத்தாமல் அப்படியே மேலே தரப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு இந்தியாவின் கவர்னராக நியமிக்கப்பட்டு, புதுச்சேரியில் பதவியேற்கவந்த டியூப்ளே, என்று புதுச்சேரியில் வந்திறங்கினார் என்பதையும், எவ்வாறு இறங்கினார் என்பதையும், எப்படிப்பட்ட முறையில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது என்பதையும் 14-1-1742-ம் நாளைய நாட்குறிப்பு வெள்ளத் தெளிய விளக்கிக்காட்டுகின்றது.

ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு டியூப்ளே காலத்து புதுச்சேரியின் நிலைமையை உலகோர்க்கு உணர்த்த எவ்வாறு உறுதுணையாக நிற்கிறதோ, அவ்வாறே ஆனந்தரங்கப் பிள்ளையின் புகழையும், பெருமையையும் விளக்கிக்காட்டும் சிறந்ததொரு ஒளிவிளக்காகவும் நின்று நிலவுகிறது.

ஆனந்தரங்கப் பிள்ளை எழுதிவைத்த நாட்குறிப்புகளிலே, 1736-ம் ஆண்டு செப்தெம்பர் திங்கள் 6-ம் நாளிலிருந்து 1748-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாள் முடிய எழுதிய நாட்குறிப்புகள் மட்டுமே இப்பொழுது நான்கு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. நான்கு பாகங்களும் சேர்ந்து 1399 பக்கங்களில் அடங்குகின்றன. ஆனந்தரங்கப்பிள்ளை 1761-ம் ஆண்டுவரையில் உயிர்வாழ்ந்திருப்பதால், அது வரையிலும் அவர் நாட்குறிப்புகள் எழுதிவைத்திருக்கவேண்டும்; 1748-ம் ஆண்டுக்கும், 1761-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதிய நாட்குறிப்புகளைப், பிரெஞ்சு இந்திய அரசியலார் எடுத்து, இனி வெளியிடக்கூடும் என்றும் எண்ணுவதற்கு இடமிருக்கிறது.

மிக்க எளிய குடும்பத்தில் பிறந்த ஆனந்தரங்கப்பிள்ளை புதுச்சேரி கவர்னர் டியூப்ளேக்கு ஆலோசனைகூறும் ஆலோசனையாளராகவும், அவரிடம் பிரெஞ்சு மொழியைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்த்துக்கூறும் மொழி பெயர்ப்பாளராகவும் இருந்து பணியாற்றும் திவான் பதவி அளவுக்கு உயர்ந்து விளங்கினார். இதற்கெல்லாம் காரணம் அவரது அறிவு, ஆற்றல், விடாமுயற்சி, கடும் உழைப்பு, யாவரோடும் நெருங்கிப் பழகும் தன்மை, நீதிக்கு பரிந்து பேசும் பண்பு ஆகியவையே யாகும்.

ஆனந்தரங்கப்பிள்ளை சென்னையைச் சேர்ந்த பிரம்பூரில் 30-3-1709-ல் பிறந்தார். அவருடைய தந்தையார் திருவேங்கிடம்பிள்ளை என்பவராவர். அவரது தொழில் வணிகத் தொழிலாகும். திருவேங்கிடம்பிள்ளையின் மைத்துனர் நைனியப்பபிள்ளை என்பவர் சென்னையை விட்டுப் புதுச்சேரிக்குக், குடியேறித் தம் வணிகத் தொழிலைப் பெருக்கத் தலைப்பட்டார். பிரெஞ்சு அரசாங்கத்தின் ஆதரவு நல்லமுறையில் கிடைத்ததால், அவர் தம் தொழிலிலேயும், செல்வாக்கிலேயும் நாளுக்கு நாள் சிறந்து விளங்கத்தொடங்கினர். அவர் தம்முடைய தொழிலைத் துணையாக இருந்து பார்த்துக்கொள்வதற்காகத், தம்முடைய மைத்துனர் திருவேங்கிடம் பிள்ளையைப் புதுச்சேரிக்கு வரவழைத்துக் கொண்டார். அப்பொழுது ஆனந்தரங்கப் பிள்ளை குழந்தையாக இருந்தார்.

அந்தக் காலத்தில் புதுச்சேரியிலிருந்த பெரும்பாலோரும் சென்னையிலிருந்து கொண்டு சேர்க்கப்பட்டவர்கள்தாம். புதுச்சேரி நகர், கிழக்கிந்தியா பிரெஞ்சுக் கூட்டுறவுச் சங்கத்தின் காரியதரிசி பிரான்சுவா மர்த்தேன் என்பவனால் புதிதாக உண்டாக்கப்பட்ட நகரமாகும். ஆரம்பத்தில் அவன் சூரத் நகரத்தைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலையிடமாகக்கொண்டு வாணிகம் செய்து வந்தான். ஆசியாவின் தூரகிழக்கு நாடுகளோடு வாணிகம் செய்வது, நல்ல வருவாய் தருவதாகும் என்பதை நாளடைவில் கண்டுகொண்டு, அவன் சோழமண்டலக் கரை நோக்கிப் புறப்பட்டான். வழியில் சென்னையில் சில நாட்கள் தங்கியிருந்தான். அங்கே கத்தோலிக்க பாதிரியார் கரோன் என்பவர் மர்த்தேனுக்கு நட்புடையவரானார். அப்பாதிரியாரின் கூற்றுக்கு இணங்கி, தமக்கும் உள்நாட்டு வணிகர்களுக்குமிடையே தரகராய் இருந்து வேலை பார்க்க, பூந்தமல்லி தானப்ப முதலியார் என்பவரை நியமித்துககொண்டான். பிறகு சோழமண்டலக்கரையில் சென்னைக்கும் பரங்கிப் பேட்டைக்கும் நடுவில் கப்பல் சரக்குகளை இறக்கி ஏற்றுமதி செய்ய வசதியான ஒரு இடத்தைத் தெரிந்து கொண்டான். அது தான் புதுச்சேரி. தரகு தானப்ப முதலியார் சென்னையிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும்

உள்நாட்டு வியாபாரிகளையும், நெசவாளர்களையும், பொது ஊழியர்களையும், பார்ப்பனர், வேளாளர், செட்டிமார், கோமுட்டிமார், செங்குந்தர், வன்னியர், வண்ணார், நாவிதர் முதலான பல்வேறு வகுப்பினர்களையும் புதுச்சேரிக்குத் தருவித்து, அவரவர்களுக்கு ஏற்றாற் போல வீடுகள் கட்டிக்கொள்வதற்கான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். இப்பொழுதும் புதுச்சேரியிலுள்ள பலருக்கும் நெருங்கிய உறவினர் வாழுமிடம், சென்னையாகத் தான் இருந்து வருகிறது.

1691-ம் ஆண்டில் தரகு தானப்ப முதலியார் இறந்துபடவே, அவருக்குப் பிறகு அவர் மகன் முத்தியப்ப முதலியார் சங்கத்தின் தரகராக நியமிக்கப்பட்டார்.

1706-ம் ஆண்டில் புதுச்சேரியை ஆணை செலுத்தி வந்த பிரான்சுவா மர்த்தேன் காலமானார். அவருக்குப் பதிலாக கியோம் ஆந்த்ரே எபேர் என்பவர் புதுச்சேரியை ஆளும்பொருட்டு பிரெஞ்சு மன்னன் 14-வது லூயி என்பவரால் அனுப்பப்பட்டார்.

எபேருக்கும் முத்தியப்ப முதலியாருக்கும் சரிப்பட்டு வராததால், முத்தியப்ப முதலியாரை நீக்கிவிட்டு தமக்கு நெருங்கிய நண்பராகக் காணப்பட்ட நைனியப்பபிள்ளையைச் சங்கத்துக்குத் தரகராக நியமித்துக் கொண்டார் எபேர்.

நைனியப்பப்பிள்ளை தரகராய் வேலை பார்க்கும் போதுதான், சங்கத்தின் வியாபாரத்தை விரிவாக்கவும், தம்முடைய சொந்த வாணிகத்தைப் பெருக்கிக் கொள்ளவும் தமது மைத்துனர் திருவேங்கிடம்பிள்ளையைப் புதுச்சேரிக்கு வரவழைக்க வேண்டி ஏற்பட்டது. திருவேங்கிடம் பிள்ளை முயற்சியோடும், ஊக்கத்தோடும் செயலாற்றி, நைனியப்பப் பிள்ளைக்குப் பலவழிகளிலும் நன்மைகள் தேடித் தந்தார்.

எபேர் மகன் அதிகாரத்துக்கு வந்தபோது நைனியப்பபிள்ளை அவரது கொடுமைக்கு ஆட்படுத்தப்பட்டார். அப்பொழுது முத்தியப்ப முதலியார் மகன் கனகராய முதலியார் சங்கத் தரகராய் நியமிக்கப்பட்டார்.

நைனியப்பப்பிள்ளை சிறையில் வைக்கப்பட்டபோது, திருவேங்கிடம்பிள்ளை பயந்துகொண்டு மீண்டும் சென்னைக்குப் போய்விட்டார். நைனியப்பபிள்ளை சிறையிலே இறந்துவிட்டார். நைனியப்ப பிள்ளையின் மூத்த மகனார் குருவப்பா என்பவர் தன் தந்தை மாசற்றவர் என்று வாதிட பாரிஸ் நகரம் வரையில் சென்று, அரசரின் நட்பினைப் பெற்று, தரகர் வேலையைத் தமக்குப் பெற்றுக்கொண்டு புதுச்சேரி திரும்பினார். குருவப்பா வந்ததும் கனகராய முதலியார் தரகர் வேலையிழந்தார்.

தமது தங்கை மகன் குருவப்பா தரகர் வேலையோடு புதுச்சேரி வந்துவிட்ட செய்தி கேட்டு, திருவேங்கிடம்பிள்ளை தம் மகன் ஆனந்தரங்கப்பனையும் அழைத்துக்கொண்டு, மீண்டும் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். அவர் குருவப்பாவுக்குப் பேருதவியாக இருந்து வேலை பார்த்து வந்தார். குருவப்பா பெருங்குடிகாரராக மாறியிருந்ததால், வேலைகளைச் சரிவரக் கவனிப்பதில்லை. வேலையின் பளு முழுவதும் திருவேங்கடம் பிள்ளையின்மேல் விழுந்தது.

குருவப்பாவுக்குப் பிறகு திருவேங்கிடம் பிள்ளை தரகராகவும், பிறகு திவானாகவும் வேலை பார்த்தார். குருவப்பா இறந்துபோன ஒரு ஆண்டு காலத்திற்குள் திருவேங்கிடம் பிள்ளையும் இறந்து போனார். திருவேங்கிடம்பிள்ளை இறந்த போது ஆனந்தரங்கப்பிள்ளைக்கு பதினேழு வயதுதான். ஆனந்தரங்கப்பிள்ளை சிறுவனாக இருக்கும் போதே அவரது தந்தையார் அவரைத் தாம் மேற்கொண்ட செயல்கள் பலவற்றிலும் ஈடுபடுத்தி, அவற்றில் நல்ல தேர்ச்சி உண்டாகும்படி செய்து வந்தார்.

திருவேங்கிடம்பிள்ளைக்குப் பிறகு கனகராய முதலியார் திவான் வேலை பார்த்து வந்தார். அவர் 1725 முதல் 1746 வரை இருபத்தோர் ஆண்டுகள் திவானாய் இருந்தார். அவருக்குப் பிறகு ஆனந்தரங்கப்பிள்ளை திவான் பதவி ஏற்றார்.

ஆனந்தரங்கப்பிள்ளை திவான் பதவி ஏற்றபின் அன்றாட அரசியல் நடவடிக்கைகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் மிக்க கவனம் செலுத்தி அரசாங்கத்தார்க்கும் பொது மக்களுக்கும் நல்லுறவையும், நன்மையையும் தேடி வரலானார். அவருடைய போக்கு அரசாங்கத்தாலும், பொது மக்களாலும் பெரிதும் மதிக்கத்தக்கதாக இருந்தது. ஊர்மக்களிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்க, அவர் அன்றாடம் ஊர்ப் பொதுச்சாவடிக்கு வருவது வழக்கம். வழக்குகளைத் தீர விசாரித்தறிந்து இருசாரும் மனம்கோணாமல் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தீர்த்து வைப்பார்.

உள்நாட்டு நடவடிக்கைகளிலும், அண்டை நாடுகளின் அரசியல், போர், வாணிகம், கப்பல்களின் போக்குவரத்து ஆகியவற்றிலும் தம் அறிவைச் செலுத்தி, நுணுக்கமாக ஆராய்ந்தறிந்து அவர் கூறிய பல முடிவுகள், அக்காலத்து கவர்னரான டியூப்ளேக்குப் பெரிதும் உதவி செய்தன. அதனால்தான் ஆனந்தரங்கப்பிள்ளையின் அறிவையும் ஆற்றலையும் டியூப்ளே பலபடப் புகழ்ந்துள்ளனர். அவர் புதுச்சேரியின் முதன் மந்திரி என்னும் நிலைமையில் எல்லா நிகழ்ச்சிகளையும் நடத்துவாராயினார். அவர் தமக்கு நம்பிக்கையுள்ள ஒற்றர்களை சென்னை ஆற்காடு, தஞ்சாவூர் போன்ற இடங்களுக்கெல்லாம் அனுப்பி, அங்குள்ள நிலைமைகளை அப்போதைக்கப்போது அறிந்து தம் நாட்குறிப்பிலே குறித்து வைத்துக்கொள்ளுவார். அந்தக் குறிப்புகள் கவர்னருக்கு ஆலோசனை கூறப் பெரிதும் உதவி செய்தன.

பிரெஞ்சு கிழக்கிந்திய கூட்டுறவு சங்கத்தார் அவரிடம் நன் மதிப்பு வைத்து அவருக்குத் தனி உரிமைகள் பல வழங்கினர். இசை முழக்கோடு பல்லக்கில் அவர் கவர்னர் மாளிகைக்குப் போகவும், தங்கப்பிடி போட்ட கைத்தடி வைத்திருக்கவும், மிதியடியோடு அரசாங்கத்து அலுவலங்களில் தடையின்றி நுழையவும் அவர் உரிமை பெற்றிருந்தார்.

அந்நாளில் தென்னாட்டிலிருந்த சிற்றரசர்களும் ஆனந்தரங்கப்பிள்ளையைப் பாராட்டுவாரானார்கள். முசபர்சங் அவருக்கு மன்சுபேதார் என்ற பட்டம் வழங்கினார்.

ஆனந்தரங்கப் பிள்ளை அக்காலத்திய வாணிகம் புதுச்சேரியில் பெருகுவதற்கான எல்லா வழிகளையும், வசதிகளையும் திறம்படச் செய்தார். நெசவுத்தொழிலுக்கு ஆதரவு தந்து அந்தத் தொழிலைப் புதுச்சேரி பகுதிகளில் வளரச்செய்து, அயல்நாடுகளுக்கு ஏராளமான துணிகளை ஏற்றுமதி செய்தார். நெசவுச் சாலைகளோடு, சாயச் சாலைகளும், அச்சுச் சாலைகளும் ஏற்படுத்தி அவற்றைத் தம் மேற்பார்வையிலே நன்கு கண்காணித்துவந்தார். அவர் ஆனந்தபுரவி என்ற பெயருள்ள கப்பலை தம் சொந்தத்திலே வைத்து வாணிகம் நடத்தினார்.

ஆனந்தரங்கப் பிள்ளை தமிழ்மொழியிடத்தும், தமிழ்ப் புலவர்களிடத்தும் நல்ல பற்று கொண்டு போற்றி வந்திருக்கிறார். தியாகராயப் புலவர், மதுரகவிராயர், சவ்வாதுப்புலவர் முதலியவர்கள் அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களிலே குறிப்பிடத்தக்கவராவார்கள். அவர் ஒரு புலவருக்குத் தட்டு நிறைய தங்கக் காசுகளைப் பரிசாகக் கொடுத்தாராம்.

ஆனந்தரங்கப் பிள்ளை பேரில் இலக்கண விளக்கப் பரம்பரை சதாசிவ தேசிகர் **ஆனந்தரங்கக்கோவை** என்ற பெயருடைய ஒரு கோவை நூலையும், சீனிவாசக்கவி என்ற பெயருடைய புலவர் **ஆனந்தரங்கவிஜயம்** என்ற ஒரு நூலையும், கஸ்தூரிரங்கய்யர் என்ற ஆந்திரப் புலவர் **ஆனந்தரங்க ராட்சந்தமு** என்ற தெலுங்கு யாப்புநூல் ஒன்றையும் இயற்றியுள்ளார்கள்.

ஆனந்தரங்கப்பிள்ளை செய்த பணிகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது அவர் எழுதி வைத்த நாட்குறிப்பேயாகும். அவரது நாட்குறிப்பு டியூப்ளே காலத்து இந்தியாவை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. அரசியல் சூழ்ச்சிகள், சமுதாய நிகழ்ச்சிகள், கலகங்கள், முற்றுகைகள், கப்பல் போக்குவரத்துக்கள், வாணிபநிலை, முகல் மன்னர் நடத்தை, நவாபு தர்பார், ஆங்கிலேயரின் போக்கு, பிரெஞ்சுக்காரரின் அரசாளும் முயற்சி, அக்காலமக்கள் பட்டபாடு, அன்னியர் அடித்த கொள்ளை, சென்னை, புதுச்சேரி, ஆர்க்காடு, வந்தவாசி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, ஐதராபாத், டில்லி முதலிய இடங்களில் நடந்த நிகழ்ச்சிகள், போர்த்தந்திரங்கள், டியூப்ளே, லபூர்தோனே, பராதி, லல்லிதொலாந்தால் முதலிய பிரெஞ்சுத் தலைவர்களின் தன்மைகள், அக்காலப் பிரமுகர்களின் வரலாறுகள், நீதியுரைகள் முதலிய பலவற்றையும் அந்நாட்குறிப்பிலே காணலாம். ஆனால் அந்த நாட்குறிப்பு சாதாரண வழக்கிலேயுள்ள கொச்சைத் தமிழிலேதான் எழுதப்பட்டிருக்கிறது.

புதுச்சேரியை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டுப் போர்புரிந்துகொண்டிருக்கும்போது, ஆனந்தரங்கப்பிள்ளை நோய்வாய்ப்பட்டிருந்து, **11-1-1761**-ம் நாள் காலமானார்.

ஆனந்தரங்கப் பிள்ளை வாழ்ந்துவந்த வீடும், அந்த வீடு இருக்கும் ஆனந்தரங்கப் பிள்ளைத் தெருவும் அவரது நினைவின் அறிகுறிகளாகப் புதுச்சேரியில் நின்று நிலவுகின்றன. ஆனால் பெருமைக்குரிய அழியா அவரது நினைவுக்குறி அவரது நாட்குறிப்பேயாகும்!

அமைதியான கண்டனம்

அமெரிக்காவின் மேற்குப்பகுதியிலுள்ள கலிபோர்னியா மாகாணத்தில் ஏராளமான சீன நாட்டினர் குடியேறினார்கள். அவர்கள் இயல்பாக மிகவும் பொறுமைசாலிகள், உழைப்பில் திறமையுடையவர்கள். எந்த வேலையையும் ஏற்றுக்கொண்டு, உழைத்துப் பலன்பெற இருந்த சீனக்காரர்களைக் கண்டால் மற்ற தொழிலாளர்களுக்குப் பிடிக்காது. மேலும் அமெரிக்காவில் இருந்தவர்கள் வெள்ளை நிறத்தவர்கள், வந்த சீனக்காரர்கள் மஞ்சள் நிறத்தவர்கள்; வெள்ளையர் கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள், சீனக்காரர்கள் பெரும்பாலும் பௌத்த அல்லது கன்பியுசியஸ் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறவர்கள். இவ்வாறு நிற, மத, வேறுபாடுகளால், வெள்ளையர்கள் சீனக்காரர்களைத் தாழ்வாக எண்ணியதுடன், ஏளனமாகவும் நடத்தினார்கள்.

இரண்டு நாட்டினரின் மனப்பான்மையையும் விளக்கும் சம்பவமொன்று, சான்பிரான்சிஸ்கோவில் நடந்தது. அப்பொழுதுதான் சீனக்காரர்கள் பெருவாரியாக அமெரிக்காவந்து, தொழில் வளம் பெருகிய காலம். ஒருநாள் நல்ல மழை பெய்து, தெரு முழுவதும் சேறும், சகதியுமாயிருந்தது. தெருவின் ஒரு பகுதியில் சேறும் தண்ணீரும் அதிகமாக இருந்தபடியால், அதைக் கடக்க ஒரு மரப்பலகை வைக்கப்பட்டிருந்தது. அதன்மீது பட்டுடை அணிந்த சீனக்காரன் ஒருவன் நடந்து வந்துகொண்டிருந்தான். பளபளப்பான ஆடையுடன் அவன் வருவதைக் கண்ட, ஒரு வெள்ளையன் மிக அவசரமாக பலகையின் மறுபக்கத்தில் ஏறி, எதிர்ப்புறமாக வந்தான். அந்தப் பலகையில் ஒருவர்தான் நடந்துசெல்ல முடியுமாதலால், வேறொருவர் எதிர்ப்புறத்தில் வருவதைக் கண்ட சீனக்காரன் திகைத்துப்போய், மேற்கொண்டு வராமல் நின்றுவிட்டான். வெள்ளையனோ மிக அலட்சியமாக நடந்துவந்து, சீனக்காரனை இடித்துத் தள்ளிவிட்டு, அவன் சேற்றில் தடுமாறி விழுவதைப் பார்த்துக் கைகொட்டி சிரித்தான். தெருவில் நின்றுகொண்டிருந்த மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து, சேற்றில் பட்டு எழுந்து நின்ற சீனக்காரனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

அவர்கள் சிரிப்பதைப் பொருட்படுத்தாமல், தன் உடையிலிருந்த சேற்றைத் தட்டிவிட்டுக்கொண்டிருந்தான் அந்த சீனக்காரன். அப்பொழுது பலகையின் மீது வந்துகொண்டிருந்த மற்றொரு வெள்ளையன் கால் வழுக்கி, சேற்றில் விழும் தருவாயிலிருந்தான். கீழே நின்றுகொண்டிருந்த சீனக்காரன் அவனை விழாமல் தடுத்து நிறுத்தினான்.

பின் தன் தொப்பியை எடுத்து, தன்னைக் கீழே தள்ளிய வெள்ளையனைப் பார்த்து வணக்கம் செலுத்தியவண்ணம், எல்லோருடைய காதிலும் விழும்படி, "நீ ஒரு கிருஸ்தவன், நான் ஒரு அஞ்ஞானி!" என்று சொல்லிவிட்டு, பொறுமையிழக்காமல் போனான். அந்த சீனக்காரன் சொல்லியது, அங்கு நின்றுகொண்டிருந்த பல கிருஸ்தவர்களுக்கு வெட்கத்தைத் தந்தது.

★★

மதி

திங்களைக் குறிக்கும் "மதி" என்ற சொல் ஒரு காரணப்பெயராகும்.

பண்டைக்காலங்களில் காலத்தின் போக்கைக் கணக்கிட ஞாயிறும், திங்களுமே முதலில் உதவியாயிருந்தன. அவற்றுள் முழுவட்டத்துடன் ஒளிவிடும் திங்கள் சிறுகச், சிறுகத் தேய்ந்து மறைந்துவிடுவதும், பின் முன்போல வளர்ந்து முழுவட்ட நிலையை அடைவதையும் கண்ட மக்கள், அந்தக்காலத்தை மாதம் என்ற ஒரு அளவாகக் கொண்டனர். இவ்வாறு காலத்தின் போக்கை மதிப்பிட உதவியாயிருந்த காரணத்தால் திங்களுக்கு மதி என்ற பெயர் முதலில் வந்தது. அதன்மீது எழுந்த கால அளவான ஒரு மாதத்துக்குத் தமிழில், திங்கள், அல்லது மதியம் என்ற பெயர் உண்டாயிற்று.

சிறுகதை

நோயின் காரணம்

மனிதர்களுக்கு வருகிற நோயின் காரணத்தைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. பலருக்குப் பலவிதத்தில் வரலாம். ஏழைக்கு வருகிற தலைவலிக்கும் பணக்காரனுக்கு வருகிற தலைவலிக்கும் நிச்சயம் வெவ்வேறு காரணங்கள் இருக்கும். காரணங்களைத் தெரிந்துகொண்டால், வந்த நோயைப் போக்குவது எளிது.

அந்த மாடிவீட்டில் வாழும் சீமாட்டி—அவள் பெரிய இடத்துப்பெண், அவளுடைய கணவனும் ஊரிலே ஒரு கனம்பொருந்திய பெரிய மனிதர்—ஒருநாள் மாலை, தனக்குத் தெரிந்த சிநேகிதிகளைப் பார்த்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பிவந்தாள். வீட்டிலிருந்து கிளம்பிப் போகும்போது நல்ல உடல் நிலையிலிருந்த அந்த சீமாட்டி, திரும்பி வரும்பொழுது முகம் வெளுத்து இருந்தது. வீட்டிற்குள் வந்ததும் உடனே மயக்கம்போட்டு விழுந்துவிட்டாள். உடனே வேலைக்காரப் பெண்கள் ஓடிவந்து, சீமாட்டியைத் தூக்கி, ஒரு சோபாவில் அமர்த்தி, தண்ணீர் தெளித்து விசிறி மூர்ச்சை தெளியப்பண்ணினார்கள். இதற்குள் கணவனுக்கு செய்தி தெரிந்து உடனே ஓடோடி வந்தார். சீமாட்டியின் நிலை காண அவருடைய கண்களில் நீர் ததும்பியது. "என்ன நேர்ந்தது? தலைவலியா? மயக்கம் வருகிறதா?" என்று கவலையுடன் அருகில் அமர்ந்து விசாரித்தார். கல்யாணமாகி ஒரு ஆண்டுதான் ஆகிறது. அதற்குள் மனைவிக்கு ஏதோ ஆபத்து என்றால் யாருக்குத்தான் பதை பதைப்பு இருக்காது. உடனே டாக்டருக்கு ஆளனுப்பினார்.

டாக்டரும் வந்தார், நாக்கை நீட்டச் சொன்னார், கைநாடியின் துடிப்பைப் பார்த்தார். மயக்கம் வந்த விதத்தைக் கேட்டார். இத்தகைய நோய் பற்றி, தான் படித்த மருத்துவ புத்தகங்களில் என்ன சொல்லியிருக்கிறது என்பதைப் பற்றிக் கவனப்படுத்திப் பார்த்தார். கடைசியாக, ஒரு காகிதத்தை எடுத்து, மருந்து எழுதிக்கொடுத்தார் மருந்து வாங்கிவர ஒரு வேலையாள் பறந்து சென்றான்.

சீமாட்டிக்கு வந்த நோய் என்னவென்று கணவனுக்குத் தெரியவில்லை. "ஏதாவது ஆபத்தானதா?" என்று டாக்டரைக் கேட்டார்.

டாக்டர் புன்முறுவலுடன் "கல்யாணமான பெண்களுக்கு வருகிற நோய்!" என்று பதிலளித்தார்.

தன் மனைவி கர்ப்பவதியாயிருக்கிறாள்! கனவானுக்கு இருந்த கவலைபோய், மகிழ்ச்சி கூத்தாடியது.

அன்றைய இரவு கழிந்தது. ஆனால் டாக்டர் கொடுத்த மருந்து பலனெதுவும் தரவில்லை. சீமாட்டியின் நிலை முன்போலவே இருந்தது. மற்றொரு டாக்டர் வரவழைக்கப்பட்டார்.

இரண்டாவது டாக்டர் வந்து பார்த்தார் "சந்தேகமேயில்லை. அம்மை வரப்போகிறது அதற்கு முன்னறிவிப்பு" என்று சொன்னார்.

கனவானுக்கு ஒன்றும் புரியவில்லை. முதலில் வந்த டாக்டர் கர்ப்பிணி என்று சொன்னார் இரண்டாவது வந்த டாக்டர் அம்மை என்று சொல்லிவிட்டார். இனிமேல் மூன்றாவதாக வேறொரு டாக்டரைக் கூப்பிட்டால், அவர் வந்து புதிதாக ஒரு நோயின் பெயரைச் சொன்னால் என்ன செய்வது என்ற பயம்

ஏழைக்கு நோய், நொடி வந்தால், அது சாவுக்குப்பின்தான் தெரியும். ஆனால் பணக்கார வீட்டில் ஒருவர் முனகினால்கூட, ஊர் முழுவதும் அதைப்பற்றிக் கவனிக்கத்தொடங்கும். மேலும் ஏழையின் வியாதிக்கு இருக்கும் காரணமும், பணக்காரனுக்கு வரும் வியாதிக்குக் காரணமும், பலவகையில் வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த வகையில் ஒன்றை, இந்தச் சிறுகதை விவரிக்கிறது. இது ஜெர்மன் நாட்டு ஆசிரியர் கெல்லர்ட் (1715—1769) அவர்களுடைய கதையின் மொழிபெயர்ப்பாகும்.

வந்தது. யாராவது ஒரு டாக்டர் சொல்வது தான் சரியாக இருக்கவேண்டும், மற்றவர்கள் சொல்வதெல்லாம் தவறு. இதில் யார் சொல்வது சரியென்று கண்டுபிடிக்க முடியும்! ஒன்றும் வேண்டாம். டாக்டர்கள் பார்த்தது போதும், மருந்துகள் ஒன்றும் கொடுக்கவேண்டாம்! என்று கனவான் எல்லாவற்றையும் நீக்கிவிட்டு, சீமாட்டிக்கு ஓய்வுகொடுத்து, படுக்கவைத்திருந்தார். ஓரிரு நாட்களில் நோய் குறைந்துவிட்டால், பயமில்லை. அதிகமானால், என்ன நோயென்று தெளிவாகப் பார்த்து, தக்க மருந்து தரலாமென கனவான் தீர்மானித்து, சீமாட்டியின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்.

சீமாட்டிக்கு நோயின் வேகம் தணிவதாகத் தெரியவில்லை. பேசும்பொழுது மூச்சுத் திணறியது. கவலையின் உருவாக உட்கார்ந்திருந்த அவளுடைய கணவன், அவள் நிலை கண்டு பயந்துவிட்டார். கடைசியாக தன் மனைவியின்மீது சாவின் நிழல் படிகிறது என்று அவருக்குப்பட்டது. அவள் படுகிற கஷ்டத்தைப் பார்க்கும்பொழுது, சாவு மேலென்று தோன்றியது.

அந்தச் சமயத்தில் மாடிப்படிக்கட்டில் யாரோ ஏறிவருவதுபோன்ற சத்தம் கேட்டது. டாக்டர்தான் வருகிறார் என்று கனவான் ஆவலோடு கதவைத் திறந்தார். ஆனால் வந்தது டாக்டரல்ல, ஒரு தையற்காரன். பக்கத்து பங்களாவிலிருப்பவர்களுக்கு கொடுக்கவேண்டிய புதிய உடையொன்றை வைத்திருந்தான். போகும் வழியில், இந்த பங்களாவில் ஏதாவது வேலை கிடைக்குமாவென்று பார்க்க வந்தான். அவன் வந்ததுகூட ஒருவிதத்தில் நல்லதாயிருந்தது.

தையற்காரனைப் பார்த்ததும், சீமாட்டி மிகக் கஷ்டத்துடன் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். 'இனி, நான் செத்ததும், என் சவத்தின்மீது மட்டும்தான் புதிய ஆடை கிடைக்கும். நான் மட்டும் உயிரோடு பிழைத்தால், இதைப்போல துணி எடுத்து தைத்திருப்பேன். இந்த மாதிரி புதிய, அழகான துணியை நான் பார்த்ததில்லை. தைத்ததுகூட நல்லமாதிரிதான் இருக்கிறது. நான் போன அன்றைக்குக்கூட இதே மாதிரி உடையைதான் அவளும் உடுத்தியிருந்தாள். எவ்வளவு அழகாயிருந்தது? ஆனால்.......எல்லாவற்றையும் நினைத்து என்ன பயன்? இன்னும் ஒரு நாழியோ, இரண்டு நாழியோ, என் உயிர் போய்விடும்." என்று பெருமூச்செறிந்து சீமாட்டி படுக்கையில் சாய்ந்தாள்.

இதுவரைக் கலக்கத்துடன் இருந்த கணவன் முகத்தில் இப்பொழுது நம்பிக்கை பிறந்தது. கடைசியாக புதிய உடையைப் பார்த்ததும், தன் மனைவிக்குக் கொஞ்சம் உயிர் வந்ததல்லவா! பேசும் பொழுதுகூட கொஞ்சம் மூச்சு நிதானமாயிருந்தது!

தையற்காரன் அறையை விட்டுச் சென்றதும், கனவானும் அவனுடன் வெளியே போனார். கதவை மூடிவிட்டு, சீமாட்டிக்குக் கேட்காமல் இரண்டு பேரும் ஏதோ மெதுவாகப் பேசிக்கொண்டனர். முதலில் பிடிவாதமாக மறுத்த தையற்காரன், கடைசியாக ஒத்துக்கொண்டு வெளியேறினான்.

அன்று மாலை, தையற்காரன் மீண்டும் வந்தான், நோய்வாய்ப்பட்டிருக்கும் சீமாட்டியைக் காண. அவன் சும்மா வரவில்லை. கையில் ஒரு துணி சுற்றிய கட்டுடன் நின்றான்.

அந்தக் கட்டில் என்ன இருக்கிறது?

தையற்காரன் அந்தக் கட்டைப் பிரித்து, வைத்தான். புதிய ஆடை! காலையில் காட்டிய அதே வகைத் துணியில், அதைவிட அழகாகத் தைக்கப்பட்ட உடை! அதிலும் சீமாட்டிக்காகத் தைக்கப்பட்டதாம்! சீமாட்டியால் நம்பவே முடியவில்லை.

ஆனால் அவள் நோய்வாய்ப்பட்டிருக்கிறாளே! இந்த புதிய உடையை எப்படிப் போட்டுக்கொள்வது?

பக்கத்திலிருந்த கணவன் "இந்த புதிய உடையைப் பார்த்ததும், நீ அணிந்து கொண்டால் எவ்வளவு அழகாயிருப்பாய் தெரியுமா? எப்படியாவது, சிறிது நேரம் போட்டுப் பார்! அதை நான் பார்த்தால்தான், என் மனம் நிம்மதியடையும்!' என்று கெஞ்சினார்.

"ஐயோ! நான் என்ன செய்வேன்! என்னால் படுக்கையிலிருந்து எழுந்து உட்காரக் கூட முடியவில்லையே! இருந்த போதிலும் உங்களுக்கு மகிழ்ச்சிதர நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன். உங்களுக்காக, நான் எப்படியாவது இதை உடுத்திக்கொள்ளு

அரசியல் முறை

ஒரு சிற்றூரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகவேண்டியிருக்கிறது. இடையே நீண்டு நெளிந்து கிடக்கும் வழி. அது சில இடங்களில் மலைப்பாறைகளைத் தாண்டிச் செல்லுகிறது, சரிவுகளில் ஊர்ந்து செல்லுகிறது, சேறு சகதிகளைக் கடந்து செல்லுகிறது. இந்த அருமையான வழியில் செல்ல வேண்டும்.

போவோரை அழைத்துப்போக வண்டிக்காரர்கள் முன்வருகிறார்கள். தத்தம் வண்டிகளின் ஆற்றலையும், பெருமையையும் பற்றி ஒவ்வொருவரும் கூறுகின்றனர். செம்மையான சக்கரங்கள், புதிதாகப் போடப்பட்டவில், கண்கவரும் கூடு, பறந்துசெல்லும் மாடு, இப்படிப் பலவாறு தம் வண்டிகளைக் காண்பிக்கின்றனர். ஆனால் குறித்த இடம் போய்ச் சேர. இவை மட்டும் போதாது; இவை முதல் தேவைகள், முழுமையும் ஆகா.

வழியை இனிமையாகக் கடந்துசெல்வதற்கு, வண்டியைச் செலுத்துவோனின் திறமையே பெரிதும் வேண்டற்பாலது. எவ்வளவுதான் நல்ல அமைப்புகளுடன் கூடிய வண்டியாயிருந்தாலும், வழியின் தன்மையறிந்து ஒழுங்காகச் செலுத்தும் திறமையற்றவனாக வண்டிக்காரன் இருந்தால், பாதையில் ஆபத்துக்கள் பல சூழக்கூடும்; வண்டி பள்ளத்தில் விழலாம், சக்கரங்கள் சேற்றில் அழுந்தலாம், பார் உடைந்துபோகும், கூடு பிரிந்துவிடும், மாட்டின் கால் ஊனமாகும், வண்டியின் உள்ளேயிருப்பவர்களின் மண்டை உடைபடும். செலுத்துவோன் செய்கிற தவறுகளால், வண்டி பாழாகும், பயணமும் தடைப்படும்.

எனவே குறிப்பிட்ட இடத்தைப் போய்ச் சேர, இனிதான பயணத்தைப் பெற, உறுதியான வண்டியுடன் வழியின் தன்மைகளை அறிந்து செல்லக்கூடிய வண்டிக்காரனும் தேவைப்படுகிறது.

செல்லுகிற பாதையின் தன்மையறிந்து நடக்கக்கூடிய வண்டிக்காரனைப் போலவே, அரசியலிலும் மக்களின் உள்ளமறிந்து நடக்க கூடியவனே ஆட்சிமுறையிலிருக்கவேண்டும். அத்தகைய திறமையும் பண்பும் இல்லாதவர்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டால் அவர்களால் ஆபத்துக்கள்தான் உண்டாகும். நாடு வறுமையெனும் பள்ளத்தில் விழும், குழப்பமெனும் சகதியில் அழுந்தும், ஒழுங்குமுறை சரிந்துவிடும், சட்டதிட்டங்கள் ஒடிந்துவிடும், வழிதெரியாத ஆட்சியாளரின் போக்கால், முன்னேற்றப் பாதையில் மக்கள் செல்லும் பயணம் தடைப்படும், நாடு பாழாகும்.

இன்பபுரி நோக்கி, மற்ற நாடுகள் பயணப்பட்டு, வெகுதூரம் முன்னேறிவிட, இந்த அலங்கோல ஆட்சியாளனை நம்பிய நாடு மட்டும், துன்பங்களாலும், துயர்களாலும் தாக்கப்பட்டு வழியில் நின்றுவிடும், சில சமயங்களில்

கிறேன்,” என்று நோய்வாய்ப்பட்டிருந்த சீமாட்டி ஒத்துக்கொண்டாள்.

அறையிலிருந்து மற்றவர்கள் வெளியே அனுப்பப்பட்டனர். வேலைக்காரி ஒருத்தி உதவியுடன், கணவன் சொல்லை மறுக்க முடியாத அந்த மனைவி புதிய ஆடையை அணிந்துகொண்டாள்.

பளப்பளப்பான ஆடையை அணிந்துகொண்டு, ஒருநாற்காலியில் சீமாட்டி உட்கார்ந்தாள். அதற்குப் பிறகு நோயின் அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை!

டாக்டரால் கண்டுபிடிக்க முடியாத வியாதிக்கு, தையற்காரனால் மருந்து கொடுத்து குணப்படுத்த முடிந்தது.

சரிவான பாதையில் அகப்பட்டுவிட்டால் சரிந்துவிழுந்து முன்பிருந்ததைவிடப் பிற்போக்கு நிலைக்குப் போய்விடும்.

இன்பபுரி நோக்கிப் பயணம் தொடங்குமுன், ஒரு நாடு தான் தேர்ந்தெடுத்துள்ள வண்டிக்காரனைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அந்த வண்டிக்காரனுக்கு மக்கள் விரும்புகிற இன்பபுரிக்குப் போகும் பாதை தெரிந்திருக்கவேண்டும். பரலோகத்துப் பாதைகளைத் தேடித்தேடி, இந்த உலகத்துப் பாதைகளைப் பற்றி ஒன்றும் தெரியாதவனாக அவன் இருக்கக்கூடாது.

மமதைவெறிகொண்டவனாக, பேதமெனும் பித்துப்பிடித்தவனாக அந்த ஆட்சியாளன் இருக்கக்கூடாது. விதியென்ற அபின் தின்றவன், அதிகாரந்தரும் போதையிலிருப்பவன், இவர்களை ஆட்சியெனும் வண்டியின் முன்னணியில் உட்காரவைத்தால், செல்லுகிற பாதை தெரியாமல், கொடுமைக் குகைக்கோ, துன்பப் படுகுழிக்கோ நாட்டை அழைத்துச் செல்வார்கள்

கேளாத காதினர், காணாத கண்ணினர், புரியாத மொழியினர், தெரியாத வழியினர் இவர்களையும் வண்டிக்காரர்களாக அமர்த்திக் கொள்ளமுடியாது. அமர்த்தினால் தவறான வழியில் செல்லும்பொழுது, வண்டியிலுள்ளவர்கள் கூச்சலிட்டு அறிவித்தால்கூட அவன் காதில் எதுவும் விழாது, வருகிற ஆபத்து அவனுக்காகவும் தெரியாது, அவன் சொல்வதும் வண்டியிலுள்ளவர்களுக்குப் புரியாது. வண்டியிலுள்ளவர்கள் படும் வேதனையும், துன்பமும் தெரியாமல், அவன்போக்கில் ஏதாவது பஜனைப்பாட்டு பாடிக்கொண்டு இருப்பான். அதட்டிச் சொன்னால், ஆத்திரமுண்டு தன்னிடமிருக்கும் சட்டமெனும் சாட்டையை எடுத்து அடித்தாலும் அடிப்பான். அந்த வண்டிக்காரனைப்போன்றோர், ஆட்சியில் இருந்தால் நாட்டுக்குத் தீங்கே விளையும்.

இனிமையான பயணத்தைப்பெற வழியின் தன்மைகளைத் தெரிந்து செல்லவல்ல வண்டிக்காரன் தேவை. அதைப்போல இனிமையான அரசியல் முறையைத் தர, மக்களின் உள்ளமறிந்து நடக்கவல்ல ஆட்சியாளனைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

அரசியல் என்பது மக்களின் உள்ளங்களின் மீது அமைக்கப்பட்ட பாதையாகும். மக்களின் உள்ளங்களை அறியாதவன், கருத்துக்களை தெரியாதவன், அரசியல் முறை அறியாதவனாகிறான்.

திறமையற்ற வண்டிக்காரனால் வண்டி சேற்றிலும் சகதியிலும் அழுந்தி தடைப்படுவது போல, தெளிவில்லாதவனின் ஆட்சி பகைமையெனும் சேற்றில் அழுந்தி, மேலும் பல துன்பங்களைத் தரும். இந்தக் கருத்தை 1800 ஆண்டுகளுக்கு முன்பே தோண்டைமான் இளந்திரையன் என்பவர் எடுத்துக் கூறியுள்ளார். அவர் தீந்தமிழ் பாடிய புலவர்களில் ஒருவர். அன்றியும், சான்றோர் மல்கிய தொண்டை நன்னாட்டில், கற்றோர் விரும்பியுறைந்த காஞ்சி நகரில் அரசாண்ட மன்னன். முடியரசனாக விளங்கியதன்றி, மொழியரசனாகவும் அவன் விளங்கினான். உலகாளும் முறையைப்பற்றி இவன் செய்த பாட்டு புறநானூறு 185 பாடலாக இருக்கிறது.

**காலொடு பட்ட சாகாடு... **

கால்பார் கோத்து ஞாலத்து இயக்குங்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறின் றாகி ஆறினிது படுமே,
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிக்பபல் தீநோய் தலைத்தலைத் தருமே.

(கால்—சக்கரம், பார்-இரண்டு சக்கரங்களை இணைப்பது. ஞாலம்-உலகு. காவல்-பாதுகாப்புடைய, சாகாடு-வண்டி, உகைப்போன்-செலுத்துவோன், ஊறு-கெடுதல். வைகலும்—நாள்தோறும். பகைக்கூழள்ளல்-பகைமை செறிந்த சேறு.)

"சக்கரத்தையும், பாரையும் கோத்து உலகில் செலுத்தும் பாதுகாப்புடைய வண்டியானது, அதனைச் செலுத்துவோன் திறமையுடையவனாயிருந்தால், கெடுதல்களில்லாமல் வழியில் இனிதாகச் செல்லும்; அவன் அதனை இனிமையாகச் செலுத்துவதற்குத் தெளிவில்லாதவனாக இருந்தால், அது நாள்தோறும் பகையாகிய சேற்றில் அழுந்தி மிகப்பல தீய துன்பங்களை மேன்மேலும் தரும்."

இவ்வாறு வண்டி செலுத்தப்படவேண்டும் முறையைக் கூறி, அதனால் உலகாளும் முறை எப்படியிருக்கவேண்டுமென்று தொண்டைமான் இளந்திரையன் கூறினார். அவர் புலவராக மட்டுமல்லாமல், ஒரு பகுதிக்கு அரசனாகவும் இருந்ததால், அவருக்கு அரசியல் முறையில் எவ்வளவு தெளிவும், திறமையும் இருக்கவேண்டுமென்பதை உணர்ந்திருக்கிறார். இனிமையான பயணத்தைப்பெற வலிவான சக்கரங்களும் பாரும், செம்மையான வண்டியும் மட்டுமன்றி, வண்டியைச் செலுத்துவோனுக்குத் திறமையும் வேண்டுமென்கிறார். அதைப் போல நல்ல நாடும், செம்மையான திட்டங்கள் மட்டும் இருந்தால் போதாது, ஒரு நாட்டின் அரசியல் நல்வாழ்வுக்கு அந்த நாட்டுக்கு வருகிற ஆட்சியாளன் தெளிவற்றவனாயினானின், மற்றவையெல்லாம் பயனற்றுப்போகும். நாடு சிறப்பிழந்து, பகைமையென்னும் சூழலில் சிக்கித்தவிக்கும் என இளந்திரையன் கண்டார். நிலைமை நீடிக்குமானால், நாடு உரிமையிழந்து, அடிமை நாடாக மீளாத துன்பத்தில் ஆழ நேரிடுமென்பதும் இதிலிருந்து அறியக் கிடக்கிறது.

சங்ககாலப்புலவராகிய அவர் கூறியது இன்றும் பொருந்துவதாகவிருக்கிறது. வழி தெரியாதவன் செலுத்துகிற வண்டியும், மாட்சிமைப்படாதவன் செய்கிற ஆட்சியும் துன்பத்தைத் தருவனவாகவே அமைகின்றன. தமக்கும், தம்கீழ் வாழ்வோர்கட்கும் அவர்கள் தம் தெளிவற்ற தன்மையால் துன்பத்தைத் தருகின்றனர். ஒன்று, இரண்டு அல்ல, ஒரு நாள், இருநாள் அல்ல, நாள்தோறும் மிகப்பல தீய துன்பங்களைத் தந்தவண்ணம் இருப்பார்கள்.

வழிதெரியாத வண்டிக்காரனை ஒதுக்க வேண்டும், ஆளத்தெரியாத ஆட்சியாளனை அகற்றவேண்டும்.

தொண்டைமான் இளந்திரையன்

சங்க காலத்தில், காஞ்சி நகரில் இருந்து ஆண்ட குறுநில மன்னன் ஆவான். இவனே தொண்டைமான் எனவும், இளந்திரையன் எனவும் வழங்கப் பட்டிருக்கின்றான். பத்துப்பாட்டில் ஒன்றான **பெரும்பாணாற்றுப்படை** என்பது இவன்மீது பாடப்பட்டதாகும். அந்தப் பாட்டு 500 அடிகளைகொண்டது. கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவரால் பாடப்பட்டதாகும்.

சங்ககாலத்திலிருந்த புலவர் ஔவையார், குறுநில மன்னன் அதியமான் நெடுமானஞ்சி இவர்கள் காலத்தில் இருந்தவன்.

இவன் புகழ்பெற்ற மன்னனாக இருந்து, தமிழ்ப் புலவர்களை ஆதரித்ததோடல்லாமல், இவனே தமிழில் செய்யுட்களியற்றும் திறமுடையவனாகவிருந்தான். இவனியற்றிய பாடல்களில் நான்கு பாடல்களே இப்பொழுது காணக்கிடைத்திருக்கின்றன: அவற்றில் மூன்று பாடல்கள் நற்றிணை என்ற சங்க நூலிலும், நான்காவது இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடலுமாகும்.

இறையனார் அகப்பொருள் என்பதற்குச் செய்யப்பட்டுள்ள உரையிலும், **நன்னூல்** என்ற இலக்கண நூலுக்கு உள்ள மயிலைநாதருரையிலும், **இளந்திரையம்** என்ற நூல் மேற்கோள் காட்டப்படுகிறது. அந்த இளந்திரையம் என்பது இவனால் செய்யப்பட்டது என்று தெரிகிறது. அந்த நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

இன்று கிடைத்துள்ள பாடல்கள் நான்கு என்றபோதிலும், கருத்தும் சொல்லும் மிக்க பல பாடல்கள் அவனால் இயற்றப்பட்டிருக்கவேண்டும் ஆனால் அவையெல்லாம், வெள்ளப் புனலாலும், கள்ளக் கருத்தாலும் அழிக்கப்பட்டுவிட்டன. மிகுந்திருப்பவைகளிலிருந்தே தொண்டைமான் இளந்திரையன் ஒரு சிறந்த புலவன் என்பது விளங்கும்.

உரிமையுடன் வாழ்ந்த தமிழகம், இலக்கியமும் இன்பமும் பெருகி நின்ற சங்ககாலம், நமக்குத் தரும் பாட்டு—பாடம் இதுவாகும். இந்தப் பாடம் நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டின் ஆட்சிமுறையில் அமர்வோருக்கும் பயன் தருவதாகும்.

தையற்கலை

[கே. பி. சுந்தரம் G. C. T.]

ப்ளவுஸ்

வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிலேயும் சீர்திருத்தத்தை விரும்பும் இன்றைய உலகத்தில் பெண்மணிகள் புதுமையும் எழிலும் மிக்க உடையை உடுத்துவதை, பெண்மைக்கு அழகு செய்துகொள்வதை வெறுத்து, ஏனோ இந்த வீண் ஆடம்பரம் என்று உளறித்திரியும், பிற்போக்குவாதிகள் ஆங்காங்கு காணப்படினும், பெண்மணிகள் தமது உடைவகையிலும் ஆண்களை விட நாகரிகமாக முன்னேறிக்கொண்டு தான் வருகிறார்கள். புத்தம் புதிய மாறுதல்களைக் கொண்ட உடையை அணிவதில் பெண்மக்கள் அதிக ஆர்வம் கொண்டுள்ளதைக் காணலாம். இயற்கை எழிலில் ஈடுபடும் பெண்மக்களின் எளிய உள்ளம், செயற்கை அழகிலும் ஈடுபடுவது இயல்புதானே! பெண்மணிகள் இக்காலத்தில் பெரிதும் விரும்பி அணிவது சோலி—ப்ளவ்ஸ் ஆகிய இருவகையே. இந்த இரண்டில் ஒன்றுதான் கீழே விளக்கப்பட்டுள்ள ப்ளவ்ஸ் ஆகும்.

பலர் பலவகையாக வெட்டித்தைக்கிறார்கள். அவற்றுள் கீழே விவரிக்கப்படுவது ஒருவகை. விளக்கப்படத்தின் வடிவம்போல அமைந்திருக்கிறதா என்று ஒத்திட்டுப் பார்த்து பிறகு, வெட்டி தைக்க வேண்டும்.

அளவுகள் :

இடுப்பு உயரம்	...	14	அங்
முழு நீளம்	....	18	,,
பாதித்தோள்	....	$6\frac{1}{4}$	,,
கை நீளம்	...	8	,,
மார்பு சுற்றளவு	....	34	,,
முன்னங்கை சுற்றளவு	....	11	,,

1-ல் இருந்து 0 வரை $18\frac{1}{4}$ அங்.
(முழு நீளம் $+\frac{1}{4}$ அங்.)

2-ல் இருந்து 0 வரை $7\frac{1}{4}$,,
($\frac{1}{4}$ மார்பு அளவில் $1\frac{1}{4}$ அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை 3 அங்.

4-ல் இருந்து 0 வரை $6\frac{1}{2}$,,
(பாதி தோள் $+\frac{1}{4}$ அங்.)

5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$,,

6-ல் இருந்து 5 வரை நேர்கோடு.



7-ல் இருந்து 2 வரை $9\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பு + 1 அங்.)
(2, 7 க்கும் குறுக்குக் கோடு வரையவும்)

8-ல் இருந்து 10 வரை $9\frac{1}{2}$,,

9-ல் இருந்து 1 வரை $9\frac{1}{2}$ அங்

10-ல் இருந்து 0 வரை $14\frac{1}{4}$,,
(இடுப்பு உயரம் +$\frac{1}{4}$ அங்.)

11-ல் இருந்து 0 வரை $1\frac{1}{2}$,,

12-ல் இருந்து 3 வரை $3\frac{1}{2}$,,

13-ல் இருந்து 0 வரை 6 ,,

14-ல் இருந்து 1 வரை $\frac{1}{2}$,,

15-ல் இருந்து 6 வரை $1\frac{1}{2}$,,

16-ல் இருந்து 15 வரை $\frac{3}{4}$,,

17-ல் இருந்து 8 வரை $\frac{1}{2}$,,
(சைடு ஷேப்—பக்க வாட்டம்)

A, 13, எண்கள் உள்ள இடத்தில் முன்பக்கம் திறப்பு (ஓப்பன்) அமைக்கவும்.

14, 11, 3, 5, 16, 7, 8, 9, 14 எண்கள் பின்பக்கம். இணைக்கவும்.

A, 13, 12, 3, 5, 15, 7, 8, 9, A எண்கள் முன்பக்கம். இணைக்கவும்.

10-க்கும் 17-க்கும் மத்தியில் அகலம் $\frac{3}{4}$ அங். நீளம் 7 அங். முன்பக்கம் இரு டக்குகளும், பின்பக்கம் மத்தியில் இரு டக்குகளும் அமைக்கவும்.

தைப்பதற்கு $\frac{1}{4}$ அங். அதிகம் வைத்துப் படம் வரையப்பட்டுள்ளது.

கழுத்து, படத்தில் காட்டியுள்ளபடி மூன்று விதமாகவும் வெட்டலாம்.

கை

0-ல் இருந்து 1 வரை $9\frac{1}{2}$ அங்.
(கை நீளம் + $1\frac{1}{2}$ அங், தோள்பக்கம் மடிப்புக்காக)

1-ல் இருந்து 2 வரை 4 அங்.
(கை நீளத்தில் பாதி அளவு)

2 ல் இருந்து 3 வரை $8\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பு அளவு)

3-ல் இருந்து 4 வரை 4 ,,
(3-ல் இருந்து 0 வரை சாய்வு கோடு வரையவும்.)

4-ல் இருந்து 5 வரை 1 அங்.

5-ல் இருந்து 1 வரை $7\frac{1}{2}$,,
(முன்னங்கை லூஸ் +2 அங். மடிப்புக்கு)

6-ல் இருந்து 0 வரை $2\frac{1}{2}$ அங்.

7-ல் இருந்து 6 வரை $3\frac{1}{2}$ அங்.

8-ல் இருந்து 7 வரை $\frac{1}{2}$,,

9-ல் இருந்து 6 வரை 1 ,,

(3, 8, 9, 0 எண்கள் பின்பக்கம் கைவளைவு, இணைக்கவும்.)

A-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$ அங்.



3, A, 9 வரை புள்ளிகள் வைத்துள்ள கோடுவரை முன்பக்கம் கை (கவர்தட்டு) வெட்டி எடுத்துவிடவும்.

முன்னங்கையில் பிளீட்டுகள் (மடிப்புகள்) அணிபவரின் விருப்பப்படி 2 அல்லது 3-ம் அதற்கு மேற்பட்டும் வைக்கலாம்.

●●●

சமாதானத்துக்கு வழி

ரயில் வண்டியில் ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த இருவருக்கும் சண்டை வந்து விட்டது. ஜன்னல் கதவை ஒருவர் திறந்து வைத்தால், மற்றவர் உடனே சடக்கென்று இழுத்துச் சாத்திவிடுவார்.

"ஜன்னல் கதவு மூடிவிட்டால், காற்றில்லாமல் புழுங்கி நான் சாகவேண்டும்!" என்று முதலாவது பேர்வழி சத்தம் போட்டார்.

"ஜன்னல் கதவு திறந்துவைத்தால் குளிர் காற்று பட்டு என் இருமல் அதிகமாகி நான் சாகவேண்டும்!" என்று இரண்டாவது பிரயாணி பதிலளித்தார்.

இருவருக்குள்ளும் சச்சரவுதான் அதிகமானது, கதவு மூடப்பட்டும், இழுக்கப்பட்டும் வந்ததேயன்றி, சண்டை முடியாமலிருந்தது. சத்தம் மிகுதியால், வண்டியிலிருக்கும் மற்றவர்களின் நிம்மதி குலைந்தது.

பொறுத்துப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் எழுந்துவந்து "முதலில் கதவைத் திறக்கிறேன், அதனால் ஒருவர் இறந்துவிடுவீர்கள், பிறகு கதவை மூடிவைக்கிறேன். இரண்டாமிருப்பவர் இறந்துவிடுவார். பின் சண்டையும் சத்தமும் இருக்காது." என்று யோசனை சொன்னார்.

நாடக அறிவிப்பு

ஒரு நகரத்தில் ஸ்பெஷல் டிராமா ஒன்றுக்காக ஒரு புகழ்பெற்ற நடிகர் சென்றிருந்தார். நாடகம் ஆரம்பிப்பதற்கு நீண்டநேரம் இருந்ததால், அந்த நடிகர் நகரத்திற்குள் சுற்றிப் பார்க்கச் சென்றார். நேரம் போகாததால், அங்கிருந்த ஒரு பழக்கடைக்காரனைப் பார்த்து, "ஏனப்பா! இந்த ஊரில் வேடிக்கை பார்க்க ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார்.

"வேடிக்கையா? இன்றைக்கு அந்தக் கொட்டகையில் ஏதோ நாடகம் நடைபெறப்போகிறதென்று நினைக்கிறேன்" என்று சொன்னான்.

"நினைக்கிறாயா? நிச்சயமாகத் தெரியாதா?"

"இல்லை, நிச்சயம் நாடகம்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் என்கடையில் அழுகிப்போய் இருந்த வாழைப்பழங்களையெல்லாம் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

தொண்டா?
துவேஷமா?

ஆசிரியர்
க. அன்பழகன் எம். ஏ.

திராவிட இயக்கத்தின் தொண்டைக் குறைகூறுபவர்களுக்குத் தக்க பதில்

பக்கம் 56 விலை அணா 8.

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

'போட்டோ' களுக்கு

மிகச் சிறந்த இடம்

மதுரையில்

"நியூ ஸ்டுடியோ"

(மீண்டும் துவக்கப்பட்டுள்ளது)

79, டௌன் ஹால் ரோடு.

உரிமை: மதுரை மதியழகன்.

"மன்றம்" வெளியீடுகள்

★ ★ ★

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—12—0

ராஜாதி ராஜா!

இரா. செழியன் M. A. விலை ரூ. 0—12—0

பொது அறிவு

—இரா. செழியன் M. A. விலை ரூ. 0—8—0

மறைந்த திராவிடம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—3—0

- ரூ. 10-க்குமேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு.
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பிவைக்கப்பெறும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்தவேண்டும்.

விவரங்கட்கு:— நிர்வாகி, "மன்றம்"

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

விற்பனையாளர்க்கு

விற்பனையாளரில் பெரும்பாலோர், தாங்கள் தொடக்கத்தில் கொடுத்த வாக்குறுதிகளை அறவே மறந்துவிட்டு, கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதைக் கண்டு மிக வருந்துகிறோம். அப்போதைக்கப்போது பாக்கித் தங்காத வகையில், பட்டியல் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பட்டியல் தொகை முன் கூட்டியே வந்து சேராவிடில், இதழ்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்கிறோம். மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக மட்டுமே தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி,

"மன்றம்"

'மன்றம்' கட்டண விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0—5—0

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

நிர்வாகி,

மன்றம்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.